Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 47

புதன்கிழமை
12 ஜனவரி 2022

மார்கழி 28 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2052

பக்கங்கள்: 16

விலை: 30/=



# ராஜபக்சக்களை விரட்டியடித்து புதுயுகம் விரைவில் மலரும்

## வடமராட்சியில் சஜித் சூளுரை

யாழ்ப்பாணம், ஜனவரி 12

ராஜபக்சக்களின் ஆட்சியில் நாடு இருண்ட யுகத்துக்குள் வீழ்ந்து விட்டது. மக்கள் தமது நாளாந்த வாழ்வைக்கொண்டு செல்லவே முடியாதளவுக்கு சுமைகள் அதிகரித்துவிட்டன. இலங்கை வரலாற்றிலேயே மக்களால் மிகமோசமாக வெறுக்கப்பட்ட அரசாங்கமாக இப்போதைய அரசாங்கம் மாறிவிட்டது. ராஜபக்சக்களை ஆட்சியில் அமர்த்திய அதே மக்களே இன்று அவர்களை விரட்டியடிக்கவேண்டுமெனத் துடிக்கின்றனர். இத்தகைய நிலையில் இருந்து விரைவில் நாட்டை மீட்டெடுத்து, புதுயுகம் நோக்கிப் பயணிக்க வைக்க, ஐக்கிய மக்கள் சக்தியால் மட்டுமே முடியும். அதற்கு மக்கள் எம்மோடு ஒன்றிணைய வேண்டுமென அழைப்பு விடுத்துள் ளார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

15 ➤



பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு 24 இலட்சம் பெறுமதியான சிறுநீரக சுத்திகரிப்பு இயந்திரத் தொகுதி ஒன்றை எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று வழங்கினார். (சு–20)

## பால் புரையேறி குழந்தை சாவு!

*சித்தன்கேணியில் சம்பவம்*

யாழ்ப்பாணம், ஜன. 12
தாய்ப்பால் குடித்த குழந்தை, பால் புரை

15 ➤

## தேவாலயத்தில் கைக்குண்டு மீட்பு

கொழும்பு, ஜன. 12
பொரளையிலுள்ள தேவாலயம் ஒன்றிலிருந்து கைக் குண்டு ஒன்று நேற்று மீட்கப்

15 ➤



**முச்சந்தி முரளி**

"உந்த மாகாண சபைத் தேர்தலும் பிள்ளையார் கல்யாணம் மாதிரி உந்தா இந்தா எண்டு இழுபட்டுக் கொண்டே இருக்கப் போகுது போல..."

## இந்த வருடத்துக்குள் மாகாண சபைத் தேர்தல்!

*உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் நீடிப்புக் குறித்தும் அரசு விளக்கம்*

கொழும்பு, ஜனவரி 12
மாகாணசபைத் தேர்தலை இந்த வருடத்துக்குள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்படும் என்று ஜனாதிபதி

15 ➤

## கடற்படைப் படகு மோதி மீனவர் உயிரிழப்பு!

இந்திய இழுவைப்படகே மோதியது என சாதிக்கின்றனர் கடற்படையினர்

கொழும்பு, ஜன. 12
மாதகல் குசுமாந்துறை கடற்பரப்பில் மீன் பிடிக்கச் சென்ற மீனவர் ஒருவர் சடலமாக

15 ➤

## துயரமான சம்பவங்கள் மீண்டும் நடக்கலாம்!

*முன்னாள் எம்.பி ஈ.சரவணபவன் எச்சரிக்கை*



யாழ்ப்பாணம், ஜன. 12
துயரமான சம்பவங்கள் மீண்டும் நடைபெறமாட்டா என்பதற்கு உத்தரவாத மில்லை. அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்

15 ➤

## 'நேர்மைக்கு மகுடம்' - தெல்லிப்பழை செயலர் சிவஸ்ரீக்கு விருது



யாழ்ப்பாணம், ஜன. 12
தெல்லிப்பழை பிரதேச செயலருக்கு 'நேர்மைக்கு மகுடம்' விருது வழங்கப்பட்டுள்ளது. ஊழல் மற்றும் இலஞ்ச மற்ற சிறந்த ஆளுமை

11 ➤

## மீனவர் சாவுக்கு நீதிகோரி – மாதகலில் நாளை பெரும் போராட்டம்!

யாழ்ப்பாணம், ஜன. 12
மாதகலில், கடற்படையினரின் படகு மோதி, மீனவர் உயிரிழந்த சம்பவத்தைக் கண்டித்தும் உயிரிழப்புக்கு நீதி கோரியும், குற்றம்புரிந்தவர்கள் தண்டிக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தியும் நாளை பெரும்போராட்டம் ஒன்று நடைபெற

15 ➤

## சிறையிலிருந்தவாறே மேற்படிப்பைத் தொடர ரஞ்சனுக்கு அனுமதி

கொழும்பு, ஜன. 12
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் நிலையில், உயர்கல்வியைத் தொடர்வதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்

11 ➤

## முற்றியது முரண் வெடித்தது இடியன்!

***இளைஞன் படுகாயம் முல்லையில் சம்பவம்***

முல்லைத்தீவு, ஜன. 12
முல்லைத்தீவு, விசுவமடு பாரதிபுரம் கிராமத்தில் இடியன் துப்பாக்கி வெடித்ததால், இளைஞர் ஒருவர் படுகாயமடைந்த நிலை

11 ➤

இனி எல்லாமே ANYTIME

SLT-MOBITEL MOBILE முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்கள் இரவு பகல் எனும் வேறுபாடுகளின்றி விரும்பும் வகையில் DATA வினைப் பயன்படுத்துங்கள்.

6.5 GB | 9 GB | 14 GB | 20 GB | 60 GB

இன்றே ரீலோட் செய்து அக்டிவேட் செய்யுங்கள்

MOBILE
4G LTE
SLTMOBITEL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஆயத்தமாகவே இருங்கள்: மின் துண்டிப்பு ஏற்படலாம்

*அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவிப்பு*



**கொழும்பு, ஜன.12**

**தேவை ஏற்பட்டால் மாத்திரமே மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும். அதற்கான முன்னாயத்த நடவடிக்கையாகவே மின்வெட்டு குறித்த அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.**

இவ்வாறு அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.

அமைச்சரை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. நாட்டில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுமா என அதில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்தபோதே அமைச்சர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்துள்ளதாவது:

தடையின்றி மின் விநியோகத்தை வழங்குவதில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலையை, மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் முகாமை செய்யவேண்டும் என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஆலோசனை வழங்கியுள்ளார். சம்பந்தப்பட்ட தரப்புகளுடன் இது சம்பந்தமாக அவர் பேச்சும் நடத்தியுள்ளார்.

நுரைச்சோலையில் இயந்திரமொன்று பழுடைந்துள்ளது. அதைத் திருத்தி வழமைக்குக் கொண்டுவருவதற்கு 10 நாள்கள்வரை எடுக்கும். அதுவரைதான் இந்த நெருக்கடி நிலை இருக்கும். அதாவது எதிர்வரும் 20 ஆம் திகதிவரை. இந்தக் காலப்பகுதிக்குள் மின் விநியோகத்தை முறையாக வழங்கலாம் என்றே எதிர்ப்பார்க்கின்றோம்.

எனினும், நெருக்கடி நிலையொன்றும் உள்ளது. அந்த நெருக்கடி இந்த 10 நாள்களுக்குள் வெளிக்கிளம்பக் கூடும். எனவே, சிலவேளைகளில் தேவை ஏற்படும் பட்சத்தில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும். அதற்கான முன்னாயத்த ஏற்பாடாகவே அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. சிறப்பாக முகாமை செய்தால் மின்வெட்டைத் தவிர்த்துக்கொள்ளவும் முடியும்- என்றார். (எ-44)

## நடமாடும் சேவை

யாழ்ப்பாணம், ஜன. 12

நீதி அமைச்சும் அதன் திணைக்களங்களும் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை யாழ். மாவட்டத்தில் இடம்பெறவுள்ளது.

நடமாடும் சேவையில் நீதி அமைச்சின் தொழிலாளர் தீர்ப்பாயம் , சமாதான நீதிவான், திடீர் மரண விசாரணை சத்தியப்பிரமாணத்துக்கான ஆணையாளர், அகில இலங்கை மொழிபெயர்ப்பாளர் தொடர்பான சேவைகள், சிறைச்சாலைச் சீர்திருத்தம் மற்றும் சிறைக்கைதிகள் புனர்வாழ்வுக்கான இராஜாங்க அமைச்சு, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான அலுவலகம், சட்ட உதவி ஆணைக்குழு, இழப்பீட்டுக்கான அலுவலகம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம், குற்றம் மற்றும் சாட்சியங்களினால் பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பதற்கான அதிகாரசபை, ஆட்பதிவுத் திணைக்களம், பதிவாளர் நாயகத் திணைக்களம், கடன் இணக்கசபைத் திணைக்களம், சமுதாயம் சார் சீர்திருத்தங்கள் திணைக்களம், புனர்வாழ்வு ஆணையாளர் நாயகத்தின் அலுவலகம், மாகாணக் காணி ஆணையாளர் திணைக்களம், மத்தியஸ்த சபை, சிறைச்சாலைத் திணைக்களம், பனை அபிவிருத்திச் சபை, சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவு, தொழிற் பயிற்சி அதிகாரசபை ஆகிய திணைக்களங்கள் பங்குபற்றவுள்ளன.

இந்த நடமாடும் சேவையில் பயன்பெற எதிர்பார்க்கும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பொதுமக்கள் தாங்கள் எதிர்பார்க்கும் சேவை தொடர்பாக தமது பிரிவு கிராம அலுவலருடன் எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு பருத்தித்துறை பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (ஒ-ரி1)



## கலாவல்லி முன்பள்ளி புதிய கட்டடம் திறப்பு

யாழ்ப்பாணம்,ஜன.12

வடக்கு மாகாணத்துக்கு வருகை தந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தையிட்டியில் அமைக்கப்பட்ட கலாவல்லி முன்பள்ளியின் புதிய கட்டடத்தை நேற்றுத் திறந்து வைத்தார். "றாகம" நிறுவனத்தின் அனுசரணை ஊடாக, நோர்வே பல்கலைக்கழக மாணவர்களின் நிதிப்பங்களிப்புடன் இந்தக் கட்டடம் அமைக்கப்பட்டது. நிகழ்வில் மாணவர்கள் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திரண, ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர். (ஒ-4-20)

*தவறான முடிவெடுத்து*

## ராகமவில் உயிரிழந்த நபர் போதைக்கு அடிமையானவர்

கொழும்பு,ஜன.12

றாகமவிலுள்ள பல்பொருள் அங்காடியில் பொருள்களை திருடியபோது பொது மக்களிடம் சிக்கி, நடுவீதியில் கழுத்தை அறுத்து தற்கொலை செய்தவர் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையானவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

பல்பொருள் அங்காடிக்கு வந்த குறித்த நபர், குழந்தைகளுக்கான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளார். அதனை அவதானித்த ஓட்டோச் சாரதி, குறித்த நபரைப் பிடிக்க முற்பட்டுள்ளார். இதையடுத்து குறித்த நபர் முச்சக்கர வண்டிச் சாரதியைக் குத்திக் காயப்படுத்திவிட்டு தப்பித்துள்ளார். இதை அவதானித்த வேறுசிலர் விரட்டிச் சென்று அவரைப் பிடிக்க முற்பட்டபோது அவர் தன் கழுத்தை தானே அறுத்துக்கொண்டு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் ராகம பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் மாத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 48 வயதுடைய சந்தேக நபர் ராகமவிலுள்ள தனது சகோதரியின் வீட்டில் வசிப்பவர் எனவும் போதைப்பொருளுக்கு அடிமையானவர் என்று தெரியவந்துள்ளது. (ம-இ)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 12

சட்டத்தரணி அம்பிகை கஜேந்திரனின் "அம்மம்மாவின் சுங்கான்" எனும் சிறுகதை தொகுப்பு நூல். இன்று மாலை 4.01 மணிக்கு யாழ் பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் வெளியீடு செய்யப்படவுள்ளது.

நிகழ்வில், நூல் வெளியீட்டுரையை எழுத்தாளர் மேமன்கவியும், மதிப்பீட்டுரையை யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் த. அஜந்தகுமாரும் ஆற்றுவர். அத்துடன், ஆசிரிய ஆலோசகர் திருமதி அ.செல்வதயளான் நூலை வெளியிட முதற்பிரதியை மூத்த கவிஞர் சோ.பத்மநாதன் பெற்றுக்கொள்வார். (ஒ-ரி1)

## ஜனவரி 17 வரை தடுப்பூசி வாரம்

கொழும்பு,ஜன.12

ஒமிக்ரோன் பரவல் அதிகரித்துவரும் சூழலில், நேற்றிலிருந்து எதிர்வரும் 17 ஆம் திகதி வரை கொரோனாத் தடுப்பூசி வாரம் சுகாதார அமைச்சால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது

இந்த வாரத்தில் 12 முதல் 19 வயது வரையான சகலரும் முதலாவது தடுப்பூசியையும், 20 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் முதல் இரண்டு தடுப்பூசிகளையும், பூஸ்டர் தடுப்பூசியையும் பெற்றிருப்பதை உறுதிசெய்ய வேண்டும் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. அதனடிப்படையில் தென்மராட்சியில் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள விரும்புபவர்கள், சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையுடன் 021 2270014 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு, மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-4-159)

## மாயமான சிறுமி வந்து சேர்ந்தார்

முல்லைத்தீவு,ஜன.12

புதுக்குடியிருப்பு - கைவேலிப் பகுதியில் காணவில்லை என்று முறைப்பாடளிக்கப்பட்ட சிறுமி, பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

14 வயதுடைய சிறுமியைக் காணவில்லை என்று பாதுகாவலர்களால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

பெற்றோரை இழந்து அக்காவுடன் வசித்து வரும் சிறுமி, கற்றல் வகுப்புக்காகச் சென்றுள்ளார். இரவாகியும் அவர் வீடு திரும்பாத நிலையிலேயே, புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது. பொலிஸாரால் தேடுதல் முன்னெடுக்கப்பட்டது.

எனினும் சிறுமி புதுக்குடியிருப்பைச் சேர்ந்த நண்பரின் வீட்டுக்குப் பேருந்தில் சென்றுள்ளார். அங்கு பிறந்த நாள் நிகழ்வில் பங்கேற்றுள்ளார். அதன் பின்னர் இரவு 9 மணிக்கு சகோதரியைத் தொடர்புகொண்டு தான் நிற்கும் இடத்தைத் தெரியப்படுத்தியுள்ளார். அதன்பின்னரே சிறுமியை புதுக்குடியிருப்புப் பொலிஸ் நிலையத்தில் ஒப்டைத்துள்ளனர். (ஒ-4-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்திரியை கைது செய்ய வியூகம் வகுக்கும் அரசு?

கொழும்பு, ஜன.12

**முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன என்று தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.**

உயிர்த்த ஞாயிறுத் தற்கொலைத் தாக்குதல் சம்பவத்தைத் தடுக்கத் தவறிய குற்றச்சாட்டிலேயே மைத்திரிபால சிறிசேனவைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று கூறப்படு கின்றது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று, உயிர்த்த ஞாயிறுத் தற்கொலைத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக்குழு பரிந்துரைத்திருந்தது. இந்தப் பரிந்துரைகளை நடைமுறைப் படுத்தவில்லை என கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உட்படப் பலரும் அரசின் மீது குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

அதேநேரம், முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது அரசைக் கடுமையாக விமர்சித்து வருகின்றார். அதனால் மைத்திரிபால சிறிசேனவை அரசு பாதுகாக்கக் கூடாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துவருகின்றனர். அதனால் மைத்திரிபால சிறிசேனவுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை எடுக்கப்படலாம் என்று கூறப்படுகின்றது.

இதேவேளை, எந்தவொரு சவாலையும் எதிர்நோக்கத் தயார் என தமக்கு நெருக்கமானவர்களிடம் மைத்திரி தெரிவித்துள்ளார் என்ற தகவலும் வெளியாகியிருக்கின்றது. (எ-இ)

## இலங்கைக்குப் படையெடுக்கும் வெளிநாடுகளின் பிரதிநிதிகள்!

கொழும்பு, ஜன.12

நான்கு முக்கிய வெளிநாட்டுப் பிரதிநிதிகள் இந்த மாதம் இலங்கைக்கு வரவுள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஹங்கேரியின் வெளியுறவு அமைச்சர் பீட்டர் சிஜார்டோ, துருக்கியின் வெளியுறவு அமைச்சர் மெவ்லூட் கவுசோக்லு, இங்கிலாந்து வெளியுறவு மற்றும் பொதுநலவாய மற்றும் மேம்பாட்டு அலுவலகத்தின் இராஜாங்க அமைச்சர் தாரிக் அஹ்மத் பிரபு மற்றும் கொரியாவின் தேசிய சட்ட மன்றத்தின் சபாநாயகர் பார்க் பியோங் சேக் ஆகியோரே இந்த மாதம் இலங்கைக்கு வரவுள்ளனர்.

ஹங்கேரியின் வெளி விவகார அமைச்சர் பீட்டர் சிஜார்டோ இன்று இலங்கை வருவார் என்று தெரிவிக்கப்பட்டது. அதேவேளை, இங்கிலாந்தின் இராஜாங்க அமைச்சர் தாரிக் அஹ்மட் பிரபு ஜனவரி 18ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார். கொரியத் தேசிய சபையின் சபாநாயகர் ஜனவரி 19 ஆம் திகதியும் துருக்கியின் வெளிவிவகார அமைச்சர் இந்தமாத இறுதியிலும் இலங்கை வருவரென எதிர்பார்க்கப்படுகின்றது என்று இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேவேளை, சீன அரச சபை உறுப்பினரும் வெளிவிவகார அமைச்சருமான வாங் யீ தமது இலங்கைக்கான பயணத்தை நிறைவு செய்து சீனா சென்றடைந்துள்ளார். (எ-இ)



## 3 இலட்சம் தொன் அரிசி இறக்குமதி

கொழும்பு, ஜன. 12

மக்களுக்கு சாதாரண விலையில் அரிசியை வழங்கும் நோக்கில் மூன்று லட்சம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

சந்தையில் போதுமான அரிசி இருப்பதை உறுதி செய்யும் வகையிலேயே இந்த இறக்குமதி அமையவுள்ளது. அமைச்சர் பந்துல குணவர்தன முன்வைத்த அமைச்சரவைப் பத்திரத்துக்கே அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. (ம)

# கொள்கை விளக்கஉரை மீது இரண்டு நாள்கள் விவாதம்

கொழும்பு, ஜன.12

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கொள்கை விளக்க உரை தொடர்பில் நாடாளுமன்றத்தில் இரு நாள்கள் விவாதம் நடத்துவதற்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 19, 20 ஆம் திகதிகளில் இதுதொடர்பான சபை ஒத்திவைப்புவேளை விவாதம் இடம்பெறுமென நாடாளுமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

நாடாளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுவின் விசேட கூட்டமொன்று சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று சபாநாயகர் அலுவலகத்தில் நடைபெற்றது. நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும் அதில் பங்கேற்றிருந்தனர்.

அதில் ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை தொடர்பில் இரு நாள்கள் விவாதம் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணையை எதிரணி கொண்டுவரவுள்ளது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் கொள்கை விளக்கஉரை எதிர்வரும் 18 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

அரசமைப்பின் 70 (1) உறுப்புரிமைக்கமைய நாடாளுமன்றக் கூட்டத் தொடரை இடைநிறுத்தும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கின்றது. இதன்பிரகாரம் கடந்த டிசெம்பர் 12 ஆம் திகதி நாடாளும்மன்ற அமர்வை ஜனாதிபதி இடை நிறுத்தினார். புதிய கூட்டத்தொடர் ஜனவரி 18 ஆம் திகதி ஆரம்பமாகும் என திகதியும் அறிவிக்கப்பட்டிருந்தது. (எ-44)




**நேருக்கு நேர் மோதினால் பிரச்சினை வருமெண்டதால, பின்னால் போய் குத்துற வேலை முந்தித்தொட்டே இருக்கு. அதிலையும் இலங்கை அரசுக்கு இப்பிடி சத்தம் போடாமல் காரியத்தை 'முடிக்கிறதில' அம்பது வருச அனுபவம் இருக்கு. எங்கட போராட்டத்துக்கு ஆரெல்லாம் முன்னுக்கு நிண்டு குரல் குடுக்கினமோ அவையை, ஆரோ செய்தமாதிரி போட்டுத்தள்ளுறது இலங்கை அரசுகளுக்கு கைவந்த கலை குமார் பொன்னம்பலம், ரவிராஜ், ஜோசப் பரராஜசிங்கம், ஊடகவியலாளர் சிவராம், சிவமகாராஜா எண்டு கனபேரை முடிச்சுப்போட்டு, அதுக்கும் தங்களுக்கும் சம்பந்தமே இல்லை எண்டு வாய்கூசாமல் சொன்னவைதான் இப்ப ஆட்சியில இருக்கினம். அதைவிட முள்ளிவாய்க்காலில சனத்தைக் கொத்துக் கொத்தா கொண்டுபோட்டு, அப்பிடி ஒரு படுகொலையே நடக்கேலை எண்டு சத்தியம் செய்த ஆக்களிட்ட, அகிம்சையில போராடி நீதியை வாங்கலாம் எண்டு நினைக்கிறது எங்கட பிழைதானே?**

அப்பிடி ஒரு பிழை விட்டதாலதான் நேற்றும் மாதகலில ஒரு உயிர் பறிபோயிருக்கு. தங்கட முகாமுக்காக அளக்க இருந்த காணியை, சனம் ஆர்ப்பாட்டம் செய்து குழப்பிப்போட்டுது எண்டு நேவிக்கு கடும் புகைச்சல். உந்தச் சனத்துக்கு முறையான பாடம் படிப்பிப்பம் எண்டு, சென்றிக்கு நிக்கிற நேவிக்காரர் சனத்துக்கு கேக்கிறமாதிரி கதைச்சவையாம். அதுக்குப்பிறகு, அங்கத்தைச் சனத்துக்கு பிடிச்சுது சனி. ஆரெல்லாம் போராட்டத்தில முன்னுக்கு நிண்டு, ஆக்களைக் கூட்டியந்தவை எண்டெல்லாம் வடிவா றெக்கி எடுத்துப்போட்டு, அப்பிடியான ஆக்களை ஏதோ ஒருவகையில இல்லாமல் செய்யிறதெண்டு நேவி முடிவெடுத்திருக்குபோல. அதால தான் கொஞ்ச நாளைக்கு முதல், மீன்பிடிக்கப் போன ரண்டு பேரின்ர படகில கஞ்சாவை தாங்களே வைச்சிட்டு, அந்த மீனவர்களை கஞ்சாக்கேஸில உள்ளுக்க நேவி தள்ளினது. அப்பவே சனமெல்லாம் கொந்தளிச்சது.

அவைரண்டு பேரும் அப்பிடியான ஆக்கள் இல்லை. இவங்கள்தான் வைச்சுப்போட்டு நாடகமாடி, உள்ளுக்க தள்ளிப்போட்டாங்கள் எண்டு எல்லாரும் ஒரே குரலில சொன்னவை. இதுக்கு முதலும் கஞ்சாக்கேஸுகள் பிடிபட்டிருக்குத்தான். ஆக்களும் அரெஸ்ட் பண்ணுப்பட்டவை. அப்பவெல்லாம் சனம் இப்பிடிச் சொல்லேலை. ஏனெண்டால், அப்பிடி பிடிபட்டவை உண்மையிலயே கஞ்சாப் பார்ட்டி தான் எண்டு சனத்துக்குத் தெரியும். ஆனால் கடைசியா பிடிபட்ட ரண்டு பேரும், அப்பிடியான வேலை செய்யேலை எண்டு உறுதியாய் தெரிஞ்சதாலதான் இப்பிடி உண்மையை எல்லாரும் சொன்னவை.

இனிக் கஞ்சாவை வைச்சு ஆரையும் உள்ளுக்க தள்ள நினைச்சால், முதலும் தாங்கள்தான் வைச்சது எண்டது பிடிபட்டுப் போடும் எண்டதால, இந்தமுறை வேற பிளான்போட்டிருக்கினம். தரையில வைச்சு செய்தால் அது சனத்துக்கு தெரிஞ்சிடும் எண்டதால, கடலுக்க வைச்சு செய்திருக்கினம். முந்தியும் இந்திய மீனவரை இப்பிடி படகால இடிச்சு கொலை செய்த அனுபவம் அவைக்கு நிறைய இருக்கு. கிட்டடியிலயும் அப்பிடிச் சிலரைக் கொண்டவை. அதேமாதிரி இப்ப மாதகல் மீனவருக்கும் செய்திருக்கினம். ஏனெண்டால், மீனவரின்ர படகு இடிபட்ட இடம் கரையில இருந்து கிட்டத்தான். அந்த இடத்துக்கு இந்தியப் படகுகள் வந்ததேயில்லை. இந்தியப் படகுகள் தனிய வாறேலை. கூட்டமாத்தான் வாறதுகள். அதோட நேற்று ஒரு இந்தியப்படகு கூட இஞ்சாலிப் பக்கம் வரேலை. அப்ப எப்பிடி இந்தியப் படகு, மாதகல் மீனவரை இடித்சிருக்க முடியும்? சரி, நேவி சொல்லுறமாரி இந்திய மீனவர் படகுதான் இடிச்சதெண்டால், அதை நேவி கண்டதெண்டால் ஓடிப்போய் அந்த இந்தியப் படகைப் பிடிச்சிருக்கலாமே? ஏன் பிடிக்கேலை? நேவியின்ர படகை விட இந்திய மீனவரின்ர படகு ஸ்பீட் கூடவோ? அப்ப என்ன நடந்திருக்கும் எண்டு விளங்குதானே. இதை இப்பிடியே விட்டால், தங்களுக்கு எதிரா போராடுற எல்லாரையும் கடலுக்கையே சமாதி கட்டினாலும் கட்டிப் போடுவாங்கள் போல. எதிர்காலத்தை நினைக்க நடுக்கமாயெல்லோ கிடக்கு.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நெருக்கடியால் இந்திய ஏற்றுமதியாளர் பாதிப்பு

**கொழும்பு, ஜன.12**

**இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி, இந்தியாவில் இருந்து மிளகாய் ஏற்றுமதி செய்பவர்களை கடும் சிக்கலில் தள்ளியுள்ளது என்று கூறப்படுகின்றது.**

இலங்கையில் மிளகாய் இறக்குமதியாளர்கள் கடந்த பல மாதங்களாக இந்திய வர்த்தகர்களுக்கு செலுத்தவேண்டிய நிலுவைத் தொகையைச் செலுத்தாதுள்ளனர். இலங்கையில் இறக்குமதியாளர்கள், இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு இந்திய மதிப்பில் 250 முதல் 300 கோடி வரையான ரூபாவுக்கு மேல் செலுத்தவேண்டியுள்ளது என்று கூறப்படுகின்றது. அதனால் இந்திய ஏற்றுமதியாளர்கள் கடும் நெருக்கடிகளைச் சந்தித்துள்ளனர் என்று இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடனைச் செலுத்தாதமை தொடர்பாக இதுவரை முறைப்பாடுகள் எதுவும் பதிவாகவில்லை என்றும், முறைப்பாடுசெய்தால் தங்களுக்குக் கிடைக்கவேண்டிய பணம் கிடைக்காது போய்விடும் என்று ஏற்றுமதியாளர்கள் அஞ்சுகின்றனர் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பரஸ்பர பேச்சு மூலம் நெருக்கடிக்குத் தீர்வு காணமுடியும் என அவர்கள் நம்புகின்றனர் என்றும், தேவைப்பட்டால் வெளிவிவகார அமைச்சின் ஆதரவை நாடவும் அவர்கள் தீர்மானித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவின் ஆந்திர மாநிலத்தில் இருந்து இந்திய மிளகாய்ப் பங்குகளை அதிகம் இறக்குமதி செய்யும் நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். (எ-இ)

*தொடர் விபத்துக்களால்*

# விமான சேவையின் பணிப்பாளர் கைது

கொழும்பு, ஜன.12

சுற்றுலாப் பயணிகளை ஏற்றிச்சென்ற இலகு ரக விமானம் விபத்துச் சம்பவம் தொடர்பில் அந்தத் தனியார் விமான நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் மற்றும் பிரதம பொறியியலாளர் ஆகியோர் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் 20ஆம் திகதி பயாகல பிரதேசத்திலும், 27ஆம் திகதி கட்டான பிரதேசத்திலும் இரண்டு விபத்துச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. சம்பவங்களில் இரண்டு விமானிகள் மற்றும் இரண்டு வெளிநாட்டவர்கள் காயமடைந்தனர். அதையடுத்து விமான சேவை இடைநிறுத்தப்பட்ட நிலையில், சம்பவம் தொடர்பான தொழில்நுட்ப அறிக்கையைக் குற்றப் புலனாய்வுப் பிரிவு கோரியிருந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பாக குற்றவியல் அலட்சியத்துக்காக தனியார் விமான நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மற்றும் தலைமைப் பொறியியலாளர் ஆகியோர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர். இரத்மலானையைச் சேர்ந்த 53 வயதுடையவருமே, ஹொரணையைச் சேர்ந்த 46 வயதுடையவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (எ-இ)

# நோயாளிகளுக்கு வீடுதேடிச் சிகிச்சை

*பொங்கலன்று ஆரம்பம்*

வவுனியா.ஜன.12

வவுனியா மருத்துவமனை ஊடாக நோயாளர் வீட்டுத் தரிசிப்பு செயற்திட்ட நடவடிக்கை நாளை மறுதினம் தைப்பொங்கல் தினத்தன்று ஆரம்பிக்கப்படும் என்று மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி க.ராகுலன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; வடமாகாண ஆளுநரின் ஆலோசனைக்கு அமைவாக, மாகாண சுகாதாரத் திணைக்களத்தால் மாவட்டம் தோறும் இந்தச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. நீண்டகாலம் கடும் தொற்றுக்குள்ளாகி இயங்குவதற்கு இயலாத மாற்றுத்திறனாளிகள், கடும் தொற்றுக்குள்ளாகி மருத்துவமனை செல்வதில் கடினங்களை எதிர்நோக்குகின்ற நோயாளர்களுக்கு நேரடியாகச் சென்று தேவைகள் முழுமை செய்யப்படும்.

மக்களுடைய பொருளாதாரப் பிரச்சினை, பயணச்சிக்கலைக் கருத்திற்கொண்டு இந்தச் சிகிச்சை முறை நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது .

நோயாளர்களுக்கான சிறுநீரக டியூப் மாற்றுதல், அவர்களுக்கு உணவு செல்கின்ற டியூப் மாற்றுதல், படுக்கையிலுள்ள நோயாளர்களுக்கு ஏற்படுகின்ற புண்கள் அல்லது காயங்களுக்கு மருந்து கட்டுதல் போன்ற செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படும்.

விசேட தொலைபேசி இலக்கமான 0772772677க்குதொடர்பு கொண்டால், ஒரு மணி நேரத்தில் சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

முதற்கட்டமாக வவுனியா பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் வசிப்பவர்களுக்கு காலை 8 மணி முதல் மாலை 4 மணிவரை சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது - என்றார். (ஒ-4-110)



# மெழுகுவர்த்தி தட்டுப்பாடு

கொழும்பு.ஜன.12

நாட்டின் சில பகுதிகளில் மெழுகுவர்த்திக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மின்வெட்டுக் காரணமாக மெழுகுவர்த்திப் பாவனை அதிகரித்துள்ளதால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதேவேளை-

எதிர்காலத்தில் நாட்டில் மெழுகுவர்த்திகள் உற்பத்தி செய்யப்படமாட்டாது என்று இலங்கை மின்சார சபையின் கூட்டுத் தொழிற் சங்கக் கூட்டணியின் அழைப்பாளர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்துள்ளார்.

சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் உப உற்பத்தியாகவே மெழுகுவர்த்திகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்தச் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டதன் காரணமாக, மெழுகுவர்த்தி உற்பத்தியும் நிறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ -4-இ)

# மலையேறியது மாலையின் விலை!

கொழும்பு.ஜன.12

உரப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதையடுத்து, பூங்கொத்துகள் மற்றும் மாலைகளின் விலையும் உயர்வடைந்துள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பிலுள்ள பூ வியாபாரிகள் தெரிவிக்கையில்; ரோஜாப் பூ முன்னர் 80 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது. தற்போது 200 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றது. பூங்கொத்துகள் செய்யக்கூட பூக்கள் பற்றாக்குறையாகவுள்ளன. அலங்கார மற்றும் அலங்காரப் பூக்களின் விற்பனை அழிந்துவருகின்றது - என்றனர்.

தற்போது பூக்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளமைக்கு உரப்பற்றாக்குறையே பிரதான காரணம். இலங்கையின் மலர்க்கிராமம் என அழைக்கப்படும் கெப்பெட்டிப்பொல, வெலிமடை மற்றும் ஊவா பரணகம ஆகிய பிரதேசங்களில் பூக்களின் பறிப்பு பாதிக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் கடும் நெருக்கடியில் உள்ளனர். நாளாந்தம் நூற்றுக்கணக்கான அழுகிய பூக்களை வெட்டி எறிய வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். (ஒ-4-இ)

# சீனி உற்பத்தியை அதிகரிக்கத் திட்டம்

கொழும்பு, ஜன. 12

இலங்கையின் சீனித் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், சீனி உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் வருடாந்தம் 6 லட்சம் மெற்றிக்தொன் சீனி தேவையாகவுள்ளது. அவற்றில் 85 வீதமானவை இறக்குமதி செய்யப்படுவதுடன், அதற்காக வருடாந்தம் 45 பில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டில் உள்ளூரில் 54 ஆயிரம் மெற்றிக்தொன் சீனி உற்பத்தி செய்யப்பட்டுள்ளதுடன், குறித்த தொகையை மேலும் அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதற்கமைய, லங்கா சீனிக் கம்பனியின் கீழ் புதிய சீனித் தொழிற்சாலையொன்றை மொனராகலை மாவட்டத்தின் வெலிஓயா பிரதேசத்தை மையமாகக் கொண்டு புதிதாக நிறுவுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது. (ம)

# கிளிநொச்சியில் அதிகரிக்கும் டெங்கு

*இதுவரை 39 பேர் அடையாளம்*

கிளிநொச்சி.ஜன.12

தற்போது பெய்து வருகின்ற பருவ மழையைத் தொடர்ந்து கிளிநொச்சி மாவட்டத்தில் டெங்குத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மாவட்டத்தில் இதுவரை 39 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் என்.சரவணபவன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் மட்டும் 21 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். பளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலும் அதிக நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அதேவேளை கொரோனா அறிகுறிகளும், டெங்குடன் தொடர்புபடுவதால், மக்கள் விழிப்புடன் செயற்பட வேண்டும். மக்கள் பொறுப்பற்ற விதத்தில் செயற்படுகின்றனர். இதுவரையில் 12 வீதமானவர்களே பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். இந்த வாரம் தடுப்பூசி வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ள நிலையில், கட்டாயம் அனைவரும் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் - என்றார். (ஒ-4-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## கம்மன்பில வெளிநாடு செல்ல அனுமதி

கொழும்பு, ஜன.12

எரிசக்தி அமைச்சரும், பிவித்துரு ஹெல உறுமய கட்சியின் தலைவருமான உதய கம்மன்பிலவுக்கு வெளிநாடு செல்ல விதிக்கப்பட்டிருந்த தடை தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 23ஆம் திகதி தொடக்கம் ஏப்ரல் 29 வரையான காலப்பகுதியில் அவருக்கு வெளிநாடு சென்றுவர கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது. (எ-இ)

# ஆதாரமற்ற குற்றச்சாட்டை சுமத்துகின்றார் கர்தினால்

## பொலிஸார் தெரிவிப்பு

**கொழும்பு, ஜன.12**

**உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வெளியிட்ட குற்றச்சாட்டுக்களை பொலிஸார் நிராகரித்துள்ளனர்.**

கடந்த சனிக்கிழமையன்று வெளிநாடு வாழ் இலங்கையர்களுடன் மெய்நிகர் தொழில்நுட்பத்தின் ஊடாகக் கலந்துகொண்டு உயிர்த்தஞாயிறு தாக்குதல் விசாரணைகள் தொடர்பாக கர்தினால் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பில் கர்தினால் வெளியிட்ட ஏழு விடயங்கள் தொடர்பில் பொலிஸார் விளக்கம் அளித்துள்ளனர்.

தாக்குதல் தொடர்பான விசாரணைகளின் அடிப்படையில் உயர் நீதிமன்றில் 12 வழக்குகள் தொடரப்பட்டுள்ளன என்றும், 42 சந்தேகநபர்களுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். சட்டமா அதிபரின் ஆலோசனைக்கு அமைய வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் சுட்டிக் காட்டினர்.

சாட்சியங்களின் அடிப்படையிலன்றி வெறும் கருத்துக்கள் அறிக்கைகளின் அடிப்படையில் குற்றச்சாட்டுக்களை சுமத்தி நடவடிக்கை எடுக்க முடியாது என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-இ)

## கலைஞருக்கு ஊக்குவிப்பு வழங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 12

யாழ்ப்பாணப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கலைஞர்கள், எழுத்தாளர்களின் படைப்புகள் மற்றும் இலத்திரனியல் வெளியீடுகளை ஊக்குவிப்பதற்கு நிதியுதவிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நிதியுதவியை, வடக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார செயற்றிட்டத்தின் ஊடாக வழங்குவதற்கான நடவடிக்கைகளை யாழ்ப்பாண பிரதேச கலாசாரப் பேரவை மேற்கொண்டுள்ளது.

இந்தத் திட்டத்தில், தரமதிப்பீட்டுக்குழுவின் தீர்மானத்துக்கமைய கலைஞர்கள் தெரிவு செய்யப்படுவார்கள்.

இதற்கு தகுதியானவர்கள் பிரதேச செயலக கலாசாரப் பிரிவுடன் தொடர்புகொள்ளுமாறு யாழ்ப்பாண பிரதேச செயலர் எஸ். சுதர்சன் அறிவித்துள்ளார். (ஒ-ரி1)



## மரக்கடத்தல் முறியடிப்பு

கிளிநொச்சி,ஜன.12

சட்டவிரோதமாக வேப்பமரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற கப் ரக வாகனம் இராணுவத்தினரால் கைப்பற்றப்பட்டு, தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தருமபுரம் - நெத்தலியாற்றுப்பகுதி இராணுவச் சோதனைச் சாவடியில் வீதிச் சோதனையின்போது வாகனம் மடக்கிப் பிடிக்கப்பட்டது.

சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டு, நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். (ஒ-4-113)

## அதிக கொள்வனவாலேயே சிலிண்டருக்குத் தட்டுப்பாடு

### லிட்ரோ நிறுவனம் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.12

அன்றாடத் தேவைக்கு அதிகமாக எரிவாயு சந்தையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது என்றும், உள்நாட்டு மற்றும் வர்த்தக சந்தை தேவைகளுக்கு ஏற்ற எரிவாயு கையிருப்பில் உள்ளது என்றும் லிட்ரோ எரிவாயு நிறுவனம் நேற்றுமுன்தினம் தெரிவித்துள்ளது.

அந்த நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

நிறுவனம் கடந்த இரண்டு நாள்களில் 2 லட்சத்து 20ஆயிரம் உள்நாட்டு எரிவாயு சிலிண்டர்களை சந்தைக்கு வழங்கியுள்ளது. ஒருநாளைக்கு அதிகபட்சமாக 90 ஆயிரம் தொடக்கம் ஒரு லட்சம் சிலிண்டர்களை வழங்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

கூடுதல் எரிவாயு சிலிண்டர்களை சேமிக்க முயல்வதாலேயே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நுகர்வோர் தினசரி தேவைகளுக்கு மட்டுமே நியாயமான விலையில் எரிவாயுவை கொள்வனவு செய்யவேண்டும் - என்றுள்ளது. (எ-இ)

## பொங்கல் பொதிகள்

சாவகச்சேரி,ஜன.12

தைப்பொங்கலை முன்னிட்டு, வணிக நிலையங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு பொங்கல் பொதிகள் வழங்கப்பட்டன.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்ற எல்லைக்குட்பட்ட பணியாளர்களுக்கே இந்தப் பொதிகள் வழங்கப்பட்டன. (ஒ-4- 9)

## பெண்கள் பிரச்சினைகளை ஆராயும் கலந்துரையாடல்

கிளிநொச்சி,ஜன.12

சமூகத்தில் பெண்களின் பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல், கிளிநொச்சி மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவுக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில், மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் தோறும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதனடிப்படையில் கிளிநொச்சியிலும் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் மகளிர் குழுக்களின் கருத்துக்கள், பெண்கள் அபிவிருத்தியோடு தொடர்புடைய உத்தியோகத்தர்களின் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

குறிப்பாக நுண்கடன் பிரச்சினைகள்,வாழ்வாதார உதவிகள், வாழ்வாதாரத்துக்கு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகள், வீட்டு வன்முறை, இளவயதுக் கர்ப்பம், சட்டவிரோதமான கருக்கலைப்பு, சட்டவிரோதமான போதைப்பொருள் பாவனை, சட்ட விரோத மதுபான உற்பத்தி, பாலியல் வன்முறை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. (ஒ-4-113)

## விலங்குகள் நலச்சட்டமூலம் விரைவில் வர்த்தமானியில்!

விலங்குகள் நலச் சட்டமூலத்தை அரசாங்க வர்த்தமானியில் வெளியிடுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

விலங்குகள் நல சட்டமூலத்தை நாடாளுமன்றத்தின் ஒப்புதலுக்காக சமர்பிக்கவும் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. 2020ஆம் ஆண்டு ஒக்ரோபர் 19ஆம் திகதி விலங்குகள் நலச் சட்டமூலத்தை உருவாக்குவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. இலங்கையின் சட்ட வரைவாளரால் உருவாக்கப்பட்ட சட்டமூலத்துக்கு சட்டமா அதிபர் அனுமதி வழங்கியுள்ளார் என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம)

# வீடற்றோருக்கு வீடுகள் புதிய திட்டம் அறிமுகம்!

வீடு அல்லது வீடமைப்பதற்கு காணியொன்று இல்லாமையால் வாடகை வீடுகளில் வாழ்கின்ற, உண்மையான வீட்டுத் தேவையுள்ள குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகளை வழங்கும் நோக்கில் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

'சொந்துரு மஹல்' எனும் பெயரில் இந்த வீடமைப்புத் திட்டத்தை தேசிய வீடமைப்பு அதிகார சபை மூலம் நடைமுறைப்படுத்துவதற்கு கிராமிய, வீடமைப்பு மற்றும் கட்டுமானங்கள் கட்டடப்பொருள்கள் கைத்தொழில் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்குத் தெரிவுசெய்யப்படும் பயனாளிகளுக்கு 5 லட்சம் ரூபா ஆரம்பத் தொகையாகச் செலுத்துவதற்கான ஆற்றல் இருக்க வேண்டுமென்றும், வீட்டுப் பெறுமதியின் எஞ்சிய தொகை தவணைக் கட்டணமாக அறிவிடப்படும் என்றும் கூறப்படுகின்றது. தேவைக்கேற்ப வங்கிக் கடனைப் பெறுவதற்கான வசதிகள், தெரிவுசெய்யப்படும் பயனாளிகளுக்குச் செய்துகொடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் திட்டத்தின் முன்னோடிக் கருத்திட்டமாக தேசிய வீடமைப்பு அதிகாரசபைக்குச் சொந்தமான ரன்பொக்குனகமவில் அமைந்துள்ள காணித் துண்டில் 72 வீடுகளை அமைப்பதற்கும், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரான பிரதமர் மஹிந்த ராஜபக்ச சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஒமிக்ரோன் தொற்றாளர்கள் எண்ணிக்கை நூறாகின்றது

கொழும்பு, ஜன. 12

இலங்கையில் ஒமிக்ரோன் திரிபுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் எண்ணிக்கை நூறை அண்மித்துள்ளது என்று சுகாதார அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது: கடந்த சில வாரங்களாக கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்துவருகின்றது. ஆயினும் ஒமிக்ரோன் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. பொதுமக்கள் தடுப்பூசிகளை ஆர்வத்துடன் பெற்றுக் கொள்ளவேண்டும். அவ்வாறு செயற்பட்டால் மட்டுமே இந்தப் பெருந்தொற்றை நாம் கட்டுப்படுத்தமுடியும் - என்றார். (ம)

## கொழும்பில் ஆண்கள் மூவரின் சடலங்கள் மீட்பு!

கொழும்பு, ஜன. 12

கொழும்பில் ஆண்கள் மூவரின் சடலங்கள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளன. வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி கடற்கரைகளில் இருந்தும் கொலன்னாவை பெற்றோலியக் கூட்டுத்தாபன வளாகத்துக்கு அருகேயுள்ள கால்வாயிலிருந்தும் இந்தச் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

மக்களிடமிருந்து கிடைத்த தகவல்களுக்கு அமைய இந்த மூன்று சடலங்களும் மீட்கப்பட்டன என்று பொலிஸார் கூறினர். வெள்ளவத்தை இராமகிருஷ்ணா வீதியை அண்மித்த கடற்பகுதியில் சடலமொன்று மிதப்பதாக வெள்ளவத்தை பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. அதன்படி, வெள்ளவத்தை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ரொஷான் டி சில்வா தலைமையிலான குழுவினர் சென்று குறித்த சடலத்தை மீட்டுள்ளனர். (ம)



## ஐயனார் ஆலயத்துக்கு மின்விளக்கு பொருத்தல்

வவுனியா, ஜன.12

வவுனியா - தாண்டிக்குளம் ஐயனார் ஆலயத்துக்கு, நீண்டகாலமாக மின்விளக்கு இன்மையால் ஆலய பக்தர்கள் சிரமங்களை எதிர்கொண்டனர்.

இதுதொடர்பாக பிரதேச இளைஞர்களால் நகரசபைத் தவிசாளர் இ.கௌதமனின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டது.

இதனையடுத்து விரைந்து செயற்பட்ட நகரசபைத் தவிசாளர் ஆலயத்தைச் சூழ்ந்த பகுதிகளில் மின்விளக்குகள் பொருத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

இந்த வீதியானது தாண்டிக்குளம் ரயில் நிலையத்துக்குச் செல்வதற்கான முக்கியமான வீதியாகக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஓ-4-110)

## பொங்கல் விழா

கொழும்பு, ஜன.12

கொழும்பு தமிழ்ச்சங்கம் நடத்தும் பொங்கல் விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறும். கொழும்பு தமிழ்ச்சங்கத் தலைவர் சட்டத்தரணி நடராஜர் காண்டீபன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், "பொங்கிக் களி(ழி)ப்போமா?" எனும் தலைப்பில் கொழும்புத் தமிழ்ச் சங்கப் பேரவை உறுப்பினர் சைவப்புலவர் கந்தையா பத்மானந்தன் சிறப்புரையை ஆற்றுவார். "வீடும் நிலமும் விளையும் பொழுது" என்னும் தலைப்பில் சடாகோபன் தலைமையில் கவியரங்கு இடம்பெறும். தொடர்ந்து நாட்டார் இசை இடம்பெறும். (ஓ-4-இ)


**YOUNG MEN'S CHRISTIAN ASSOCIATION JAFFNA**

யாழ்ப்பாணம் YMCA கல்வியை ஊக்குவிக்கும் முகமாக வருடாந்தம் விருதுகள் - வழங்கும் நிகழ்வினை நடாத்தி வருகின்றது. இதற்கமைய கீழ்வரும் விருதுக்கு வடமாகாணத்தில் வசிக்கும் தகைமையுள்ள அனைத்து மாணவர்களும் விண்ணப்பிக்கலாம்.

02. சகலதுறை விற்பனர் (Best All Rounder) விருது *(இவ்விருதில் வெற்றி பெறும் இரண்டு மாணவர்களுக்கு (ஒருஆண். ஒருபெண்) ரூபா 35,000/- வீதம் பணப்பரிசு வழங்கப்படும்)*

தகுதியுடையவர்கள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களை பொதுச்செயலாளர். 109. கண்டிவீதி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு 24.01.2022 க்கு முன்னதாக நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கவும். **மேலதிக விபரங்களுக்கு : 021 222 2499 / 077 476 6300 / 076 876 6300**

**மின்னஞ்சல் : jaffnaymca@gmail.com**

பொதுச்செயலாளர்
YMCA யாழ்ப்பாணம்

(CR 37330) (3/6)


## மரண அறிவித்தல்

### திருமதி மகாதேவா சிவபாக்கியம்

(இராசம்மா)



பிறப்பு 08.12.1938 — இறப்பு 11.01.2022

மந்துவில் கொடிகாமத்தினை பிறப்பிடமாகவும் நல்லூர் கைலாசபிள்ளையார் கோவில் வீதியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகாதேவா சிவபாக்கியம் (இராசம்மா) அவர்கள் நேற்று (11.01.2022) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகநாதன் ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் இளைய மகளும், காலஞ்சென்ற தில்லையம்பலம் தெய்வானைப் பிள்ளையின் மருமகளும், காலஞ்சென்ற தில்லையம்பலம் மகாதேவா அவர்களின் அன்பு மனைவியும், வாசுகி, மனோகரி (பிரான்ஸ்), மகிந்தன், (லண்டன்), சந்திரன், தர்மேந்திரா ஆகியோரின் பாசமிகு தாயாரும், புத்மகுமார் (மதுவரித் திணைக்களம்), சிறிதரன் (பிரான்ஸ்), உதயா (லண்டன்), உதயகலா, ஜெயந்தினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கந்தையா, சிவசுப்பிரமணியம், மற்றும் அன்னபூரணம் ஆகியோரின் சகோதரியும், சேயோன் மாயோன் சுருதிகா, ஆகியோரின் அம்மம்மாவும், அக்சயன் ஷஜன் ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் கிரியைகள் ஆரம்பமாகி, நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனகிரியைகளுக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

36 கைலாசபிள்ளையார் கோவிலடி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல் :
குடும்பத்தினர்.

(CS 1068)

## மரண அறிவித்தல்

பிறப்பு 26 . 09 . 1938



இறப்பு 11 . 01 . 2022

### செல்லப்பா தர்மலிங்கம் BSc(Cey)

(ஆசிரிய ஆலோசகர் - கொழும்பு பிறைட்டன் நிறுவன முன்னாள் பௌதிக ஆசிரியர், முன்னாள் பௌதிக போதனாசிரியர்- இலங்கை பல்கலைக்கழகம், விரிவுரையாளர்-நைஜீரியா பல்கலைக்கழகம்)

வேலணை கிழக்கைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தை சுவிசுத்தராமவை வசிப்பிடமாகவும், யாழ்ப்பாண நகர் இரண்டாம் குறுக்குத்தெருவைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா தர்மலிங்கம் நேற்று (11.01.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா மங்கையர்க்கரசி தம்பதியரின் அருமைப் புத்திரனும், பண்டிதர் அ. பொன்னுத்துரை-நாகரெத்தினம் தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற கமலாதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியை) யின் அன்புக் கணவரும், Dr. சதாபானு ஜனகனின் (லண்டன்)பாசமிகு தந்தையும், பாலசுந்தரம்பிள்ளை ஜனகனின் (லண்டன்) அன்பு மாமனும், ஜ.ஸ்ரீஸ்கந்தனின் ஆசைப் பேரனும், சிவலோகநாதன், இராஜேஸ்வரி (கனடா) மற்றும் காலஞ்சென்றவர்களான இராசலிங்கம், சண்முகலிங்கம் ஆகியோரின் சகோதரனும், சிவலோகநாதன் (கனடா), யோகேஸ்வரி, சாந்தினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மைத்துனரும், திருமதி நாகேஸ்வரி திருநாவுக்கரசு, கல்யாணசுந்தரம், பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை, Dr.விமலேந்திரன் (கனடா), எந்திரி பாலேந்திரன் (கனடா), திருமதி விமலாதேவி, விஜயகுமார் (கனடா), எந்திரி யோகேந்திரன் (அவுஸ்திரேலியா), ரவீந்திரன் (லண்டன்), புவனேந்திரன் (லண்டன்), திருமதி நிர்மலாதேவி, லோகராஜ் (கனடா) மற்றும் காலஞ்சென்ற வத்ஸலாதேவி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அன்னாரின் வேலணை இல்லத்தில் ந.ப 12.00 மணியளவில் நடைபெற்று, சாட்டி செம்படவன் இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திருப்பதி, வேலணை.

தகவல்:
Dr.சதாபானு ஜனகன்
மகள் - மருமகன்

(CS 1091) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## விலாங்குகள் வெளிப்படுவதில்லை... !

விலாங்கு மீன்களைப்போலவே அவற்றின் வாழ்க்கை முறையும் வேறுபட்டது. விலாங்கு மீன்கள் பொதுவாக மறைந்தே வாழ்பவை. விலாங்கு மீன்களின் தலை பாம்பைப் போன்றதாகவும், வால் மீனைப் போன்றதாகவும் இருக்கும். அவை ஏதேனும் இடத்தில் மறைந்து இருக்கின்ற சமயத்தில் பாம்பு வந்தால் வெளியில் தலையை மட்டும் நீட்டும். இதைப் பார்த்த பாம்பு தனது இனத்தைச் சேர்ந்த ஒன்றுதான் அங்கு உள்ளது என்றுவிட்டுச் சென்றுவிடும். மீன் வந்தால் வாலைக்காட்டும், வந்த மீன் தனது இனத்தைச் சேர்ந்த ஒன்றுதான் உள்ளது என்று உள்ளே சென்றால் மீனின் கதை முடிந்துவிடும். ஆக, விலாங்குகளை நம்பினால் இரையாவதைத் தவிர வேறு வழியில்லை. இதே நிலைதான் இப்போது இலங்கைக்கும்.

'சீனா எமது உயிர்த்தோழன். சீன அரசாங்கம் நாடுகளின் சுதந்திரத்துக்கு மதிப்பளித்துச் செயற்படுகின்றது. நிபந்தனைகளை விதித்து ஒருநாட்டின் விவகாரங்களில் தலையிடும் கொள்கை சீனாவிடம் இல்லை'-இவ்வாறு கொழும்புத்துறைமுக நகரில் சீன வெளிவிவகார அமைச்சர் வாங் யீ பங்கேற்ற நிகழ்வில் வைத்துக் கருத்துத் தெரிவித்துள்ளார் பிரதமர் மஹிந்த ராஜபக்ச.

ஒருநாடு தன் கடனை திரும்பச் செலுத்துவதற்குரிய இயலுமையில் உள்ளதா?- இல்லையா? என்ற பரிசீலனைக்கு அப்பால், அந்தந்த நாடுகளுக்கு கடன்களை 'இறுக்கமான' ஒப்பந்தங்களின் வாயிலாக வாரிக் கொடுத்து கேந்திர முக்கியத்துவம் மிக்க பகுதிகளையும் பிறநாடுகளின் தேசியச் சொத்துக்களையும் 'குத்தகை' என்ற பெயரில் கபளீகரம் செய்வது சீனத்துக்குப் புதிதல்ல. இன்னும் சொல்லப்போனால், சீனாவின் 'அறிவிக்கப்படாத' வெளிவிவகாரக் கொள்கை அது.

2010ஆம் ஆண்டில் சீனா உலக நாடுகளுக்கு வழங்கிய கடன்தொகை 40 பில்லியன் அமெரிக்க டொலராக இருந்தது. 2020ஆம் ஆண்டில் இந்தத் தொகை 170 பில்லியன் டொலராக உயர்ந்துள்ளது. ஒரு தசாப்தத்துக்குள் நான்கு மடங்குக்கும் அதீதமான வளர்ச்சி இது. ஏன் இவ்வாறு தாராளப் பிரபுவாக சீனா இருக்கின்றது? என்ன அடிப்படையில் இந்தக் கடன்களை வழங்குகின்றது? என்று புள்ளிவிவரங்களைப் பரிசீலித்தால் இந்தக் கடனுக்குப் பின்னரான ஆபத்து அம்பலமாகும்.


இதைவிட, ஹொங்கொங்கிலும் சரி, தென்சீன வட்டகையிலும் சரி (வியட்நாம், இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ்) சீனா மேற்கொள்ளும் இராணுவ ரீதியிலான அத்துமீறல்கள் கொஞ்சநஞ்சமல்ல. ஒரு போர்முனையாக இன்று தென்சீனக் கடல் மாறியிருக்கின்றது என்றால் அதற்கும் மூலகாரணம் சீனாதான். இப்படியிருக்கையில், எவ்வாறு சீனா நாடுகளின் இறைமையை-சுதந்திரத்தை மதித்துச் செயற்படுகின்றது என்ற தன் கருத்துக்கான நியாயப்பாட்டை பிரதமர் மஹிந்த ராஜபக்ச வெளிப்படுத்த- தெளிவுபடுத்தவேண்டும்.

'சீனா எமது உயிர்த்தோழன்' என்ற ஒற்றைக்கூற்றே ஆபத்தான விலாங்குக்கு அருகில் இலங்கை என்னும் சிறுமீன் நெருக்கமாகச் சென்றுவிட்டது என்பதன் அர்த்தப்பாடுதான். 'ஒளிந்திருந்தது எம்மைப்போன்ற மீனல்ல, அது ஒரு இரைகௌவி' என்பது இனித்தான் அரசாங்கத்துக்குப் புரியும். ஆனால், அதற்குள் அனைத்தும் முடிந்துவிடும்.

இந்த விடயத்தில் சீனம் புரிந்துகொள்ளவேண்டிய விடயமும் ஒன்றுள்ளது. இலங்கையென்பது ராஜபக்சாக்களின் சீதனக்காணியல்ல. ராஜபக்சக்களின் நிலைப்பாடுதான் ஒட்டுமொத்த இலங்கையர்களின் நிலைப்பாடுமல்ல. இந்தத் தெளிவை ஏற்படுத்திக்கொள்வதுதான் சீனத்துக்கு அழகு. இந்த வட்டகையின் தேவைப்பாடும் அதுவே...!

நாளொரு நல்வார்த்தை

"நமக்கு நாமே உண்மையாக இருந்தால், எங்களால் யாரிடமும் பொய்யாக இருக்க முடியாது" - *வில்லியம் ஷேக்ஸ்பியர்*



# கடனை மீளச் செலுத்துவதை மறுசீரமைக்க உதவுங்கள்!

## இலங்கைக்கு பெரும் நிவாரணமாக இருக்கும் சீனாவிடம் கோரினார் ஜனாதிபதி கோத்தாபய

**கொழும்பு, ஜன. 12**



**கொவிட் தொற்று நோய்க்கு முகங்கொடுத்துள்ள சூழ்நிலையில், பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வாக கடனை மீளச் செலுத்துவதை மறுசீரமைப்பதில் கவனம் செலுத்தினால், அது நாட்டுக்கு பெரும் நிவாரணமாக அமையும் - என்று ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச கோரிக்கை விடுத்துள்ளார்.**

சீன மக்கள் குடியரசின் வெளிவிவகார அமைச்சரும் அரச ஆலோசனைச் சபையின் உறுப்பினருமான வாங் யீக்கும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும் இடையில், ஜனாதிபதி அலுவலகத்தில் கடந்த 9ஆம் திகதி சந்திப்பொன்று இடம்பெற்றது. இதன்போதே மேற்படி கோரிக்கையை ஜனாதிபதி முன்வைத்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான நட்புறவை மீட்டிப் பார்த்த வாங் யீ, மீண்டும் இலங்கைக்கு வருகைதரக் கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்ததுடன், நெருக்கமான நண்பன் என்ற வகையில் சீனாவின் ஒத்துழைப்பு எப்போதும் கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

கொவிட் தடுப்பூசித் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்காக, இலங்கைக்கு சினோபார்ம் தடுப்பூசிகளை வழங்க சீன அரசு தொடர்ச்சியாக வழங்கிய ஆதரவுக்கும், ஜனாதிபதி சீன அரசுக்கு நன்றி தெரிவித்தார்.

புதிய பொதுமைப்படுத்தலின் கீழ் சுற்றுலாப் பயணிகளுக்காக இலங்கை திறக்கப்பட்டுள்ளது. சீன சுற்றுலாப் பயணிகளை உயிர்க் குமிழிக்குள் மட்டுப்படுத்தி இலங்கைக்கு வரவழைப்பதற்கு உதவுமாறு, வாங் யீயிடம் ஜனாதிபதி கேட்டுக் கொண்டார்.

சீனாவிலிருந்து மேற்கொள்ளப்படும் இறக்குமதிகளின் போது சலுகை வர்த்தகக் கடன் திட்டத்தைப் பெற்றுக் கொள்ள முடிந்தால், கைத்தொழிற்றுறையைத் தடையின்றி சீராக நடத்த முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ஒ-இ)

# கறுப்புப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது மக்கள் வங்கி!

இலங்கையின் அரச வங்கியான மக்கள் வங்கி, கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக அலுவலகத்தின் கறுப்புப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த ஒக்ரோபர் மாதம் கொழும்பிலுள்ள சீனத் தூதரகத்தின் பொருளாதார மற்றும் வணிக அலுவலகத்தால் மக்கள் வங்கி கறுப்புப் பட்டியலில் இணைக்கப்பட்டது. சீன நிறுவனமொன்று இறக்குமதி செய்யத் தீர்மானித்த சேதன உரத் தொகைக்குப் பணம் செலுத்துவதில் ஏற்பட்ட பிரச்சினையை அடுத்தே மக்கள் வங்கி கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தது.

அண்மையில் நிறுவனத்துக்கு இலங்கை 6.9 மில்லியன் டொலரை இழப்பீடாக வழங்கியதை அடுத்து, கறுப்புப் பட்டியலில் இருந்து மக்கள் வங்கி விடுவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

நாளை
13.01.2022
வியாழக்கிழமை
மார்கழி 29


சுபநேரம் : 08.03 - 09.33
ராகுகாலம் : 02.03 - 03.33

பொன்னாலை, வரதராஜப் பெருமாள் தேர், சுவர்க்கவாயில் ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில் முதன்முறையாக

# மனிதனுக்கு பொருத்தப்பட்டது பன்றியின் இதயம்



நியூயோர்க், ஜன.12

உலகிலேயே முதன்முறையாக, ஒரு வருக்கு மரபணு மாற்றப்பட்ட பன்றியின் இதயத்தைப் பொருத்தி, இதய மாற்று அறுவை சிகிச்சை செய்து அமெரிக்க மருத்துவர்கள் வரலாற்றுச் சாதனை புரிந்துள்ளனர்.

மருத்துவ உலகில் உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை தொடர்பாக பல் வேறு ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் மிருகங்களின் உறுப்புகளை மனிதர்களுக்கு பொருத்தும் முயற்சியில் மருத்துவர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் பன்றியின் இதயம் மனிதர்களின் இதயத்துடன் ஒத்து போவதாக தெரிவித்துள்ள விஞ்ஞானிகள் அதனை மனிதர்களுக்கு பொருத்தும் முயற்சியில் ஈடுபட்டனர்.

அதன்படி மரபணு மாற்றம் செய்யப்பட்ட பன்றியின் இதயத்தை மனிதனுக்குப் பொருத்தி அமெரிக்க மருத்துவர்கள் வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர். அமெரிக்காவைச் சேர்ந்த 57 வயதான இதய நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு இதய மாற்று அறுவை சிகிச்சை செய்யவேண்டியிருந்தது. ஆனால் மனித இதய மாற்று அறுவை சிகிச்சைக்கு அவரது உடல் நிலை ஒத்துழைக்காது என்பதை அடுத்து மரபணு மாற்றம் செய்யப்பட்ட பன்றியின் இதயத்தை பொருத்த முடிவு செய்யப்பட்டது.

இதையடுத்து சுமார் 8 மணி நேரம் நடந்த அறுவை சிகிச்சையில் பன்றியின் இதயத்தை நோயாளிக்கு வெற்றிகரமாகப் பொருத்தியுள்ளனர். பன்றியின் இதயத்தை அறுவைச் சிகிச்சை மூலம் பொருத்திக்கொண்ட முதல் நபர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# மரண அறிவித்தல்



தோற்றம் 11 . 06 . 1925

மறைவு 10 . 01 . 2022

## கந்தையா கனகசபை

(Retired Cooperative Inspector)

சூழானை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கனகசபை (Retired Cooperative Inspector) அவர்கள் கடந்த (10.01.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தங்கம்மா தம்பதியரின் அன்பு சிரேஷ்ட மகனும், காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை ஐயாத்தையின் அருமை மருமகனும், காலஞ்சென்ற க. சரஸ்வதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான அ.செல்லமுத்து, க.தர்மலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், க.ஸ்ரீகோமதி, வ.இந்துமதி, க.ஜீவன், க.காந்திமதி ஆகியோரின் பாசமிகு அன்புத் தந்தையும், அ.கதிர்வேல், அ.வடிவேல், ஜி. சோபனா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், மயூரன், சமீனா, ஜீ.அபியங்கா, ஜீ.யாதகி, ஜீ.ரிசிகேஸ் ஆகியோரின் செல்லப் பேரனும், ம.சகானாவின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.01.2022) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி (சுன்னாகம்) இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குமாரவேலர் வீதி, சூழானை, சுன்னாகம்.
021 224 2266, 077 4258 262
001 (416) 500 2531
001 (416) 699 6953

தகவல் : குடும்பத்தினர்.

(CS 1092) 1-6

தமிழகத்தில்

# எதிர்வரும் 31வரை ஊரடங்கு நீடிப்பு

சென்னை, ஜன.12

தமிழகத்தில் தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கு எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நீடிக்கப்பட் டுள்ளது எனத் தெரிவிக்கப்படு கிறது.

இந்தியா முழுவதும் உருமாறிய கொரோனாவான ஒமிக்ரோன் தொற்று அதிகரித்து வரும் நிலையில் அதனை தமிழகத்தில் கட்டுப்படுத்தும் முகமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை தளர்வுடன் கூடிய ஊரடங்கு பிறப்பிக் கப்பட்டி ருந்தது.

இந்த நிலையில் ஊரடங்கு நேற்றுடன் முடிவடைந்த நிலையில், கூடுத லாக சில கட்டுப்பாடுகளுடன் தமிழக அரசு ஊரடங்கை நீடித்து அறிவிப்பு ஒன்றை வெளி யிட்டுள்ளது. (ச-இ)

பரவுகின்றது

# அடுத்த புதிய வைரஸ் 'புளோரோனா'

உலகை ஆட்டிப் படைத்து வரும் கொரோனா வைரஸுடன் 'இன்புளுவன்சா' எனப்படும் குளிர்காய்ச்சலை உண்டு பண்ணும் வைரஸும் இணைந்து 'புளோரோனா' என்ற புதிய வைரஸ் உருவாகியுள்ளது.

முதல்முறையாக இஸ்ரேல் நாட்டில் கர்ப்பிணி ஒருவருக்கு இந்த வைரஸ் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இந்த 'புளோரோனா' வைரஸ் தற்போது இலத்தீன் அமெரிக்க நாடான மெக்ஸிகோவிலும் கண்டறியப்பட்டுள்ளது என அந்த நாட்டு சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** சிலருக்கு இடமாற்றம் உண்டாகலாம். வசதி பெருகும். குடும்பத்தினர் உங்களை பெருமிதப்படுத்துவர். மகிழ்ச்சி கூடும். உங்களது கோபத்தைத் தூண்டியவர் மன்னிப்புக் கேட்பார்.

**இடபம்:** பணவரவு கூடும். பணியைப் பரபரப்பாக முடிப்பீர்கள். நீங்கள் எடுத்த விஷயத்தைச் செய்து முடிக்க கால தாமதம் ஏற்படும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றி நிம்மதி அடைவீர்கள்.

**மிதுனம்:** தொழிலில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கை எட்டுவீர்கள். துணிச்சலாக எடுக்கும் முடிவுகள் வெற்றியைத் தரும். வேலையில் முன்னேற்றம் ஏற்படும். கடன் குறையும்.

**கடகம்:** வியாபாரிகளுக்கு பணியாட்கள் மூலம் நன்மை உண்டாகும். எந்தவொரு விஷயத்திலும் தெளிவான முடிவை எடுப்பீர்கள். புதிய விஷயங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் உண்டாகும்.

**சிம்மம்:** மேலதிகாரிகள் மூலம் நன்மை கிடைக்கப்பெறுவீர்கள். கல்விக்கான செலவு கூடும். சாதகமான பலன்கள் கிடைக்கும். நிதானத்தைக் கடைப்பிடித்தால் வீண் பிரச்சினை ஏற்படாது.

**கன்னி:** பிறருக்கு வாக்குறுதியை அளிக்கும் முன் யோசிப்பது நல்லது. முக்கிய முடிவு எடுக்கும்போது அனுப [illegible] கள். மற்றவர்களைப் பற்றி விவா திப்பதைத் தவிர்ப்பது நல்லது.

**துலாம்:** தடைகள் நீங்கி எடுத்த விஷயத்தை வெற்றிகரமாக முடிப்பீர்கள். குடும்பத்தினரை அனுசரித்துச் சென்று நன்மை காண்பீர்கள். அலுவலக இரகசியத்தை வெளியில் சொல்லாமல் இருப்பது நல்லது.

**விருச்சிகம்:** பணியிடத்தில் புதிய அனுபவம் கிடைக்கும். சோர்வு நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. சேமிப்பில் ஆர்வம் கூடும். பரபரப்பான நாள். புதிய தீர்மானம் ஒன்றை எடுப்பீர்கள்.

**தனுசு:** குடும்பத்தில் இருக்கும் ஒருவருக்கு அதிகப்படியான வருமானம் வரும். சகபணியாளர்கள் உங்களுக்கு அனுசரணையாக நடந்துகொள்வர். குழந்தைகளின் எதிர்கால நலனுக்காக அதிகம் பாடுபடுவீர்கள்.

**மகரம்:** குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழல் நிலவும். நட்பு வட்டம் விரியும். உங்களது பேச்சால் நன்மை விளையும். நிம்மதி கூடும். வீண் பழி தரும் செயல் எதையும் செய்ய வேண்டாம்.

**கும்பம்:** தந்தையின் உடல்நலம் மேம்படும். கவலை தீரும். பணியாளருக்கு சிறப்பான நன்மைகள் ஏற்படும். கலை ஆர்வம் வரும். பயம் தீரும். வீண் வம்புகளில் சிக்கவேண்டாம். சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**மீனம்:** உங்களது பேச்சால் நன்மை உண்டாகும். அதிகம் உழைப்பீர்கள். கவலைப்படாமல் உங்களது கடமைகளை செய்து முடிப்பது நல்லது. தாமதமாகி வந்த வாய்ப்புகள் அனைத்தையும் கைவரப்பெறுவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## உலக ஹிந்தி தின நிகழ்வு

யாழ்ப்பாணம், ஜன. 12

உலக ஹிந்தி தின நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விருந்தினர் விடுதியில் கொண்டாடப்பட்டது.

இதன்போது, இந்தியன் கோர்ணரில் ஹிந்தி மொழி கற்கும் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற நிகழ்வில், இந்திய துணைத் தூதரகப் பதில் துணைத்தூதர் ராம் மகேஷ், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ஒ-ரி1,20)

## டெங்கு விழிப்புணர்வு

முல்லைத்தீவு, ஜன. 12

தேசிய ரீதியில் இந்த மாதம் 10, 11 ஆம் தினங் களை டெங்கு ஒழிப்பு தினங்களாக பிரகடனப்படுத்தப்பட்டதை முன்னிட்டு, நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க பாடசாலையில் டெங்கு விழிப்புணர்வு இடம் பெற்றது.

இதில்,பொது சுகாதாரப் பரிசோதகர்கள், இராணுவத்தினர், பொலிஸார் கலந்து கொண்டு மாணவர்களுக்கு விழிப்புணர்வுக் கருத்துக்களை முன்வைத்ததோடு டெங்கு ஒழிப்புச் செயற்பாடுகளையும் முன்னெடுத்தனர். (ஒ-ரி1,13)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ வாஸ் கூஞ்ஞ

தமிழகத்தின் அகதி முகாம்களி லுள்ள ஈழத் தமிழர்களின் இயல்பு வாழ்வு, தாயகம் திரும்புதல் ஆகி யவற்றை வலியுறுத்தி 'இலவுக் கிளி களாக இலங்கை அகதிகள்' என் னும் தலைப்பில் நேற்றையதினம் பிரசுரமான கட்டுரையின் தொடர்ச்சி இன்று பிரசுரமாகின்றது.

திருவண்ணாமலையிலுள்ள இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில் வசிக்கும் டேவிட் அனோஜன் என்பவர், இலங் கைத் தமிழர்களின் நலன் காக்கும் விதமாக தமிழக அரசு அமைத்துள்ள ஆலோசனைக்குழுவில் முதன்மைக் குழுவின் தலைவராகவும் அமைச்சராகவுள்ள செஞ்சி மஸ்தா னைச் சந்தித்து வழங்கியுள்ள மனுவிலுள்ள மிக முக்கிய விடயங்கள் இந்தச் செய்திக் கட்டுரையில் இடம்பெற்றுள்ளன.



# இலவுக் கிளிகளாக இலங்கை அகதிகள்

தங்கள் சொந்த விருப்பத்தில் நாடு திரும்ப விருப்பம் உள்ளவர்கள் என்று சுமார் 4 ஆயிரம் நபர்களின் விவரங்கள் ஏற்கனவே இந்திய மற்றும் இலங்கை அரசுகளுக்குச் சம்பந்தப்பட்ட தொண்டு நிறுவனத்தின் மூலம் கையளிக்கப்பட்டு பல்வேறு நடவடிக்கைகள் கடந்த சில ஆண்டுகளாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தங்கள் சொந்த விருப்பத்தில் நாடு திரும்ப விரும்புபவர்களை அங்கு அழைத்துச் செல்லும் செயற்பாடுகள் மீண்டும் முன்னெடுக்கப்படும்போது பின்வரும் பரிந்துரைகளை தமிழக அரசு கவனத்தில் கொள்ளவேண்டும்.

1. கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட நாடு திரும்புதல் செயற்பாடுகள் போல் அல்லாமல் இனிவரும் காலங்களில் சொந்த விருப்பத்தில் நாடு திரும்ப விரும்பும் மக்களை அரசு கணக்கெடுத்து இந்திய -இலங்கை அரசுகள் ஏற்றுக்கொள்ளும் ஓர் உடன்படிக்கையின் அடிப்படையில் நாடு திரும்பும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டும்.
2. இலங்கை - இந்திய அரசுகள் ஏற்படுத்தும் உடன்படிக்கை எந்த விதத்திலும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தமிழகத்தில் தொடந்து தங்கியிருக்க விரும்பும் மக்களை அவர்களது விருப்பம் இல்லாமல் நாடு திரும்ப வலியுறுத்துவதாக இருக்கக்கூடாது என்பதை தமிழக அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.
3. தமிழகத்தில் இருந்து தங்கள் 'தாயகத்துக்கே திரும்பிச் செல்ல விரும்புவோர் அது தொடர்பாக சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரிடம் மனு அளித்து அவர்களைக் கணகெடுத்து மத்திய அரசு அனுமதி பெற்று இலங்கைக்குத் திருப்பி அனுப்ப மாநில அரசு சார்பில் நடவடிக்கை எடுக்கவேண்டும்.
4. தமிழகத்தில் இருந்து அழைத்து வருவோரை அவரவர் பூர்வீக நிலங்களில் குடியமர்த்தி அவர்களுக்கு சர்வதேச தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் வீடு கட்டிக்கொடுக்கத் திட்டங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. ஆனால் இலங்கையில் மறுகுடியமர்த்துதல் என்பது மிகவும் சிரமமான பணியாக இருந்து வருகிறது. யாருடைய நிலம் யாருக்குச் சொந்தமானது, யார் யாருடைய வாரிசு என்பதெல்லாம் தேடிக்கண்டடைய முடியாத விடயங்களாக இருக்கின்றன என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் அண்மையில் கூறியிருந்தார். எனவே இங்குள்ள மக்கள் இலங்கை திரும்பும் முன் அவர்களது காணி நிலங்களை இலங்கைதத் தூதரகம் மூலம் முன்கூட்டியே உறுதிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.
5. தாயகம் திரும்ப விரும்பும் இலங்கை அகதிகளுக்கு அங்கே முதல் கட்டமாக வீடுகள், காணிகள் ஒதுக்கப்படவும் அதை இப்போதே பத்திரப்பதிவு செய்து தரவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். நாடு திரும்ப உள்ளவர்களுக்கு இலங்கையில் வீடுகள் கட்டி முடிக்கப்படும்வரை இந்தியாவில் அவர்கள் உதவித் தொகையுடன் தங்கியிருக்கவும் வீடுகள் கட்டி முடித்த பிறகு குடிபெயரச் செய்யவும் நடவடிக்கை எடுக்கப் பட வேண்டும்.
6. நாடு திரும்ப விருப்பம் தெரிவிக்கும் குடும்பங்களிலுள்ள குழந்தைகள் இங்கே உயர் கல்வி படித்துக் கொண்டிருந்தால் அவர்கள் படித்து முடிக்கும்வரை அவர்களது குடும்பமோ அல்லது குழந்தைகள் மட்டுமோ இங்கு தங்கியிருக்கவும் வழி வகை செய்யவேண்டும்.



7. இந்தியாவில் பட்டப் படிப்புகள் முடித்துள்ளவர்களின் கல்விச் சான்றிதழ்களை இலங்கை அரசு அங்கீகரிப்பதாக உத்தரவாதமளிக்கும் ஒப்பந்தங்கள் இதுவரை இரு நாடுகளிடையே ஏற்படவில்லை. அதனால் இங்கு கல்விகற்று முடித்தாலும் அந்த நாட்டில் வேலை வாய்ப்பைப் பெறமுடியாத நிலை உள்ளது. இலங்கைத் தூதரகத்தால் சான்றிதழ்களில் சிவப்பு முத்திரை இடும் பணிகளை அவர்கள் நாடு திரும்பும் முன்பே செய்து முடிக்கப்பட வேண்டும்.
8. இலங்கையின் மட்டக்களப்பில் மிகப் பெரிய தொழில்பேட்டை ஒன்று உருவாக இருப்பதாகவும் அதில் தமிழகத்தில் இருந்து நாடு திரும்புபவர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதிப்படுத்தப்படும் என்று கூறப்படுகிறது. அப்படி ஒரு திட்டம் இருப்பின் மீள் குடியமர்வுக்காகத் திரும்பிச்செல்ல விருப்பமுள்ள படித்த இளைஞர்கள் மற்றும் இங்கு சுய தொழில் செய்து வருபவர்கள் இலங்கை சென்று தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொள்ளவும் கடன் உதவிகள் பெற்று, தொழில் வாய்ப்பை உருவாக்கிக் கொள்ளவும் ஏதுவாக அவர்களுக்கு சென்னையிலுள்ள இலங்கைத் தூதரகத்திலேயே நேர்காணலை நடத்துதல் மற்றும் தொழில் செய்வதற்கான கடன் போன்றவற்றை உறுதிப்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.
9. தமிழகத்தில் அகதிகளின் பெற்றோருக்குப் பிறந்த குழந்தைகளை இலங்கைத் தூதரகத்தில் பிறப்புச் சான்றிதழை இலங்கை அரசின் பிறப்பு, இறப்பு பதிவு செய்யும் சட்டத்தின்கீழ் பதிவு செய்து அதற்கான சான்றிதழைப் பெற்ற பின்னரே இலங்கை திரும்ப அனுமதிக்கவேண்டும்.
10. நாடு திரும்பும் நபர்கள் தங்கள் கடவுச் சீட்டையும் குடியுரிமையையும் விரைவாகவும் எளிதில் பெறவும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.
11. ஐக்கிய நாடுகள் சபையின் உதவியோடு விமானங்களில் பலர் இலங்கை திரும்பிச் செல்கிறார்கள். அவர்கள் சுமார் 30 கிலோ எடையிலான உடைமைகளையே எடுத்துச் செல்ல முடிகிறது. அதனை மாற்றி இந்தியாவில் தாங்கள் வைத்துள்ள அசையும் சொத்துக்கள் அனைத்தையும் தங்களுடன் எடுத்துச்செல்ல தனியாக கப்பல் வசதி செய்து கொடுக்கவேண்டும்.
12. அசையும் சொத்துக்களில் தாங்கள் இங்கு வாங்கி பயன்படுத்திவரும் இருசக்கர மூன்று சக்கர மற்றும் நான்கு சக்கர வாகங்களை உரிய சான்றுகளுடன் இலங்கைக்கு எடுத்துச்சென்று பயன்படுத்த உரிய அனுமதியும் அந்த வாகனங்களை ஏற்றுமதி, இறக்குமதி வரிகள் இல்லாமலோ அல்லது குறைந்த கட்டணத்தையோ நிர்ணயித்து அவற்றை அங்கு கொண்டுசென்று பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.
13. இந்தியாவில் இருந்து இலங்கைக்கு அழைத்து வரப்படுபவர்களுக்கு முதல்கட்டமாக 30 ஆயிரம் ரூபா வழங்க அரசு திட்டமிடுவதாகத் தகவல் தெரிவிக்கப்படுகிறது. இந்தத் தொகை மீள் பரிசீலிக்கப்பட்டு அந்த குடும்பங்களின் வாழ்வாதாரத்தை குறைந்தது ஓர் ஆண்டாவது சமாளிக்கும் விதத்தில் வழங்க வேண்டும்.

சிறுபான்மையினர் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சராக தாங்கள் பொறுப்பேற்ற பின்பு மேற்கொள்ளப்பட்ட இலங்கைத் தமிழர் முகாம்களின் ஆய்வுகளுக்கு பின்னர் நடைபெற்ற ஒரு செய்தியாளர் சந்திப்பில் 'அகதி முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்கள் எவரையும் கட்டாயப்படுத்தி இலங்கை அனுப்ப மாட்டோம் அவர்களின் ஒப்புதல் படியே செயற்படுவோம் அவர்களுக்கு என்றும் பாதுகாப்புடன் நாங்கள் இருப்போம்' என்று தாங்கள் கூறிய வார்த்தைகள் மீது நாங்கள் கொண்டுள்ள அளவற்ற நம்பிக்கையின் அடிப்படையில் மேற்கண்ட கோரிக்கைகளை பரிசீலித்து, தமிழக முதல்வரின் கவனத்துக்குக் கொண்டு சென்று உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அந்த மனுவில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி மன்றங்களின் காலம் ஒரு வருடத்தால் நீடிப்பு

**கொழும்பு, ஜன. 12**

**340 உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலத்தை, அடுத்த வருடம் மார்ச்மாதம் 19ஆம் திகதிவரை நீடிப்பதற்கான விசேட வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.**

அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன், குறித்த வர்த்தமானி அறிவித்தலை நேற்றுமுன்தினம் இரவு வெளியிட்டுள்ளார்.

அதன்படி 24 மாநகர சபைகள், 41 நகர சபைகள் மற்றும் 275 பிரதேச சபைகளின் பதவிக் காலம் அடுத்த வருடம் மார்ச் மாதம் 19 ஆம் திகதி வரை நீடிக்கப்படவுள்ளது என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (த-இ)

## குட்டித் தேர்தல் ஒத்திவைப்பு

கொழும்பு, ஜன. 12

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு அரசு எடுத்துள்ள முடிவானது, ஜனநாயக விரோதச் செயலாகும் என விமர்சித்துள்ள எதிர்க்கட்சிகள், உடனடியாகத் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தியுள்ளன.

2018 பெப்ரவரியில் தேர்தல் நடத்தப்பட்ட 340 உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக்காலத்தை ஓராண்டுக்கு நீடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியாகியுள்ளது. இதனால் தேர்தலும் ஓராண்டு பிற்போகும்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சுகாதார நிலைமை மற்றும் உள்ளூராட்சிமன்றங்களுக்கு உரிய வகையில் செயற்படுவதற்கு நல்லாட்சியின்போது வாய்ப்புக் கிடைக்காமை ஆகிய காரணங்களை அடிப்படையாகக் கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டது என அரச தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், தேர்தலை எதிர்கொள்ள அஞ்சியும், படுதோல்வியை தவிர்ப்பதற்காகவுமே அரசு பதவிக் காலத்தை நீடிக்கும் கைங்கரியத்தை கையாண்டுள்ளது என எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

"மக்கள் ஆணையை மீறும் வகையில் பதவிக்காலம் ஓராண்டு நீடிக்கப்பட்டுள்ளது. இது ஜனநாயக விரோதச் செயலாகும். இந்த நடவடிக்கையை அரசு மீளப்பெற வேண்டும். உரிய காலப்பகுதிக்குள் தேர்தலை நடத்த வேண்டும்." என்று ஜே.வி.பியின் செயலாளர் நாயகம் வலியுறுத்தினார்.

"இந்த அரசு மக்கள் செல்வாக்கை இழந்துவிட்டது. மக்கள் கடும் சீற்றத்தில் உள்ளனர். எனவே, தேர்தல் நடத்தப்பட்டால் தோல்வி நிச்சயம். அந்த பயத்தால்தான் தேர்தல் நடத்தப்பாடமல், இழுத்தடிக்கப்படுகின்றது" - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார சுட்டிக்காட்டினார்.

"அரசுக்கு தற்போது மாற்றுவழியில்லை. தோல்வி நிச்சயம் என்பதால்தான் தேர்தல் நடத்தப்படாமல் இழுத்தடிப்புச் செய்யப்படுகின்றது. இதனை ஏற்கமுடியாது. உரிய காலத்தில் தேர்தல் நடத்தப்பட வேண்டும்"- என்று ஐக்கிய தேசியக்கட்சி உறுப்பினர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்தார். (த-44)

## மன்னாரில் வெளியாகிறது 'கவசம்' குறுந்திரைப்படம்

மன்னார், ஜன. 12

பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இணையத்தின் தயாரிப்பில் மன்னார் ஊடகவியலாளர் ஜெகனின் இயக்கத்தில் சமூக விழிப்புணர்வூட்டும் 'கவசம்' குறுந்திரைப்படம் இன்று வெளியாகிறது. மன்னார் நகர சபை மண்டபத்தில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணியளவில் இது வெளியீடு செய்யப்படவுள்ளது.

மன்னார் ஃபோரம் இணைப்பாளர் ச. திலீபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில், மன்னார் மாவட்ட செயலர் திருமதி ஸ்ரான்லி டி மேல் சிறப்பு விருந்தினராகவும் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர்கள் செல்வம் அடைக்கலநாதன், சார்ள்ஸ் நிர்மலநாதன் மற்றும் ஓய்வுபெற்ற வடக்கு மாகாண பிரதம செயலாளர் அந்தோனிப்பிள்ளை பத்திநாதன், மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் த.வினோதன் என பலர் கலந்துசிறப்பிக்கவுள்ளனர்.

இந்த வெளியீட்டின் பின்னர், படத்தில் பங்குபற்றிய கலைஞர்களுக்கான நினைவுச் சின்னங்களும் வழங்கப்படவுள்ளன. (த)

### மேற்படிப்பை...

டுள்ளது. ரஞ்சன் ராமநாயக்க விடுத்த கோரிக்கைக்கு அமைய சிறைச்சாலை திணைக்களத்தால் குறித்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, நாவல திறந்த பல்கலைக்கழகத்தின் ஊடாக முகாமைத்துவம், தலைமைத்துவம், இளைஞர் மற்றும் சமூக அபிவிருத்தித் திட்டம் தொடர்பான கல்வியைக் கற்பதற்காக அவருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சூம் தொழில்நுட்பம் ஊடாக விரிவுரைகளை தொடர ரஞ்சன் ராமநாயக்கவுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படுவதாக சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-இ)

### முற்றியது...

யில் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை, குடும்ப உறவினர்களுக்கிடையில் இடம்பெற்ற முரண்பாட்டின்போது இடியன் துப்பாக்கியால் சூடு நடத்தப்பட்டது என்று விசாரணையில் கூறப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில், பாரதிபுரம் கிராமத்தைச் சேர்ந்த சபிசன் (வயது - 22) என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில், காயமடைந்த இளைஞனின் உறவு முறையான 47 மற்றும் 32 வயதுடைய இருவரை புதுக்குடியிருப்பு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

குற்றச்சம்பவம் இடம்பெற்ற இடத்தில், பொலிஸ் தடயவியல் பிரிவினர் நேற்று தடயங்களைச் சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர். விசாரணை தொடர்கின்றது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-19)

### தெல்லிப்பழை....

மிக்க அரச சேவையாளருக்காக குறித்த விருது தெல்லிப்பழை பிரதேச செயலர் சண்முகராஜா சிவஸ்ரீக்கு நேற்று வழங்கப்பட்டுள்ளது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் சிவஸ்ரீக்கு குறித்த விருது வழங்கப்பட்டது.

ட்ரான்ஸ்பெரன்சி இன்டர் நஷனல் ஸ்ரீலங்கா நிறுவனம் நேர்மையான அரச அலுவலர்களைக் கௌரவித்து, பாராட்டி நேர்மைக்கு மகுடம் விருதுகளை வருடாந்தம் வழங்கி வருகின்றது.

அந்த வகையில் இந்தமுறையும் அகில இலங்கை ரீதியில் 10 பேருக்கு விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. (த-26)

# யாழில் 10 தேர்தல் தொகுதிகளிலும் எனது ஆட்சியில் தொழிற்சாலைகள்!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 12

"எமது ஆட்சியில் யாழ்ப்பாணத்திலுள்ள பத்துத் தேர்தல் தொகுதிகளிலும் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்படும்" என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வலி.வடக்கு மாவை கலட்டி, கொல்லங்கலட்டிப் பகுதியில் நேற்று நடைபெற்ற மக்கள் கலந்துரையாடலிலே அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் படித்த இளைஞர் யுவதிகளுக்கு சிறந்த தொழில் வாய்ப்பு இல்லாத நிலையில் சிறந்த திட்டங்களை வகுத்துச் செயற்படுத்துவதற்குரிய தலைமைத்துவமும் இல்லை.

யாழ்.மாவட்டத்தில் 15 பிரதேச செயலர் பிரிவுகள், பத்து தேர்தல் தொகுதிகள் உள்ளநிலையில், இவை அனைத்துக்கும் சென்றவன் என்ற அடிப்படையில் மக்கள் பிரச்சினைகள் பற்றி நன்கு தெரியும். குளிரூட்டப்பட்ட அறைகளில் இருந்துகொண்டு காங்கேசன்துறை மக்களின் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது.

நாட்டில் வாழும் மக்கள் மத்தியில் பல்வேறு தேவைப்பாடுகள் மற்றும் தீர்க்கவேண்டிய பல பிரச்சினைகள் உள்ளன. அதன் காரணமாகவே இயலுமானவரை மக்கள் மத்தியில் சென்று அவர்களின் குறைகளைக் கேட்டுவருகிறேன். யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று வந்திருக்கிறேன். காங்கேசன்துறையில் வைத்து என்னால் உறுதிமொழியை வழங்கமுடியும். யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள10 தேர்தல் தொகுதிகளிலும் 10 தொழிற்சாலைகளை எனது ஆட்சியில் நிறுவேன்.

நாட்டில் தற்போது மக்கள் நிம்மதியாக வாழமுடியவில்லை. ஆட்சியாளர்கள் தொடர்பில் மக்கள் விரக்தியின் விளிம்புக்குச் சென்றிருக்கிறார்கள்.

ஆகவே, மக்களைப் புறந்தள்ளி நடக்கும் அரசாங்கத்துக்கு எதிராக மக்களுடன் மக்களுக்காக பயணிக்கும் அரசாங்கத்தை ஏற்படுத்துவதற்கு நான் தயாராக இருக்கிறேன்- என்றார். இந்தநிகழ்வில், நாடாளுமன்ற உறுப்பினர்களான எரான் விக்கிரமரத்ன, புத்திக பத்திரண மற்றும் சஜித் பிரேமதாஸவின் இணைப்புச் செயலாளரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிச் செயலாளருமான உமா சந்திரபிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

குறித்த நிகழ்வை ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்பாளர் வன்னியசிங்கம் பிரபாகரன் ஒழுங்குசெய்திருந்தார். (த-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாடகை அடிப்படையில்வாகனம் பெறுவதற்கான

## கேள்வி அறிவித்தல்

### வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் அலுவலகப் பயன்பாட்டிற்கு 01.01.2015ற்கு பின்னர் பதிவு செய்யப்பட்ட வான் ரக வாகனம் ஒன்றினை வாடகை அடிப்படையில் வழங்குவதற்கு ஆர்வமுடைய வாகன உரிமையாளர்களிடமிருந்து கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

இவ்விடயம் தொடர்பில் மேலதிக விபரங்களை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை யாழ்வீதி, மானிப்பாய் எனும் முகவரியில் அமைந்துள்ள எமது தலைமை அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசியூடாகவோ (021 225 6650) பெற்றுக் கொள்ள முடியும். மேலும் 12.01.2022ம் திகதி தொடக்கம் 25.01.2022ம் திகதிவரை அலுவலக நாட்களில் மு.ப 09.00 தொடக்கம் பி.ப 2.30 வரை நிதிக்கிளையில் ரூபா.1000.00 (மீளப்பெறாத தொகையினை) செலுத்தி கேள்விப் பத்திரத்தினைப் பெற்று 27.01.2022ம் திகதி பிற்பகல் 02.30 மணிக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்தவுடன் கேள்விதாரர் அல்லது வருகைதரும் பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்

**தலைவர்**
**பெறுகைக்குழு,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**யாழ் வீதி, மானிப்பாய்.**
**12.01.2022** (cr.5684)(2.6)



## வாடகைக்கு

யா/ வைத்தியசாலை வீதியில்
முதலாம் மாடி கடைகள் வாடகைக்
குண்டு அலுவலகத்திற்கும் ஏற்றது.
(CS 42197) (3/6) தொடர்பு: 077828 1956



## சாரதி தேவை

யாழ். நகரில் உள்ள கடை ஒன்றிற்கு மகேந்திரா கப் வாகனம் ஓடக் கூடிய ஆள்த் தேவை. தொடர்புகளிற்கு: (CS 1098) 1-6

077 9370 000, 075 988 1000



## வேலையாள்கள் தேவை

யாழ். கோண்டாவிலில் இயங்கிவரும் மிக்சர்
தொழிற்சாலைக்கு பொதி செய்வதற்கு பெண்
வேலையாள்கள் தேவை. சம்பளம் நேரில் பேசித்
தீர்மானிக்கப்படும். முன் அனுபவம்
உள்ளவர்கள் விரும்பத்தக்கது. (cs.42184) (2.6)

077 360 3839


# கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் இளைஞர்கள் இருவர் கைது

முல்லைத்தீவு, ஜன. 12

முல்லைத்தீவிலிருந்து கொழும்பு நோக்கி கேரளக் கஞ்சாவைக் கடத்திச்சென்ற குற்றச்சாட்டில் இளைஞர்கள் இருவர் நேற்றுமுன்தினம் இரவு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இராணுவப் புலனாய்வுப் பிரிவின ருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை அடுத்தே மேற்படி கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட் டுள்ளன.

புதுக்குடியிருப்பைச் சேர்ந்த இளைஞர்களே கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் 22 மற்றும் 39 வயதுடையவர்கள். கைதான இளைஞர்களிடம் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

(ம-110)


## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 02 . 11 . 1927 இறப்பு 30 . 12 . 2014



அமரர் ஆச்சிப்பிள்ளை கனகசபை

(ஓய்வுபெற்ற ஆசிரியை)

ஆண்டுகள் ஏழு உருண்டு ஓடினாலும்
தங்கள் நினைவுகள் எம்மை விட்டகலாது
தனிவழி நின்று பிள்ளைகளை வளர்த்தீர்கள்
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திப்போம்.

கனகபதி, வட்டு மேற்கு. குடும்பத்தினர்.
வட்டுக்கோட்டை (CR 5685)1-6



## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி
உத்தியோகத்தராக பணிபுரியும்
**திரு. இ. பிரகாஸ்**
அவர்களின் தந்தையார்
**பொன்னையா இரத்தினம்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**நலன்புரிச் சங்கம்**
**பிரதேச செயலகம் தெல்லிப்பளை.**



தோற்றம் 09.11.1946 மறைவு 02.01.2022
(cs.42198 A) (2.6)



## கண்ணீர் அஞ்சலி

எமது பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி
உத்தியோகத்தராக பணிபுரியும்
**திருமதி பி. கீதாஞ்சலி**
அவர்களின் அன்புத் தந்தையார்
**சண்முகராஜா சந்திரதாஸ்**
அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
**நலன்புரிச் சங்கம்**
**பிரதேச செயலகம் தெல்லிப்பளை.**



தோற்றம் 13.08.1949 மறைவு 08.01.2022
(cs.42198 A) (2.6)




# சித்தார்த் சர்ச்சை பதிவு வலுக்கும் எதிர்ப்புகள்

சென்னை, ஜன.12

இந்திய பூப்பந்தாட்ட வீராங்கனை சாய்னா நேவாலை சர்ச்சைக்குரிய வகையில் விமர்சித்து ருட செய்துள்ளார் என நடிகர் சித்தார்த் மீது சமூக வலைத் தளத்தில் எதிர்ப்பு கிளம்பி யுள்ளது. இந்த நிலையில் இந்திய தேசிய மகளிர் ஆணையம் நடிகர் சித்தார்த்திடம் விளக்கம் கோரியுள்ளது.

நடிகர் சித்தார்த் தனது ருவிட் பதிவுகளின் மூலம் அவ்வப்போது சர்ச்சைகளிலும் சிக்குவதுண்டு. தற்போது புதிய சர்ச்சையில் நடிகர் சித்தார்த் சிக்கியுள்ளார்.

கடந்த 5ஆம் திகதி பிரதமர் மோடி, பஞ்சாப் மாநிலத்தில் பல்வேறு நலத்திட்டங்களைத் தொடங்கி வைப்பதற்காக, அங்கு சென்றபோது வழியில் விவசாயிகளின் போராட்டத்தால் பாதுகாப்பு குறைபாடு காரணமாக, மீண்டும் டில்லி திரும்பினார்.

இந்த விவகாரம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், இது தொடர்பாக பூப்பந்தாட்ட வீராங்கனை சாய்னா, "எந்தவொரு நாட்டின் பிரதமரின் பாதுகாப்பும் சமரசம் செய்யப்பட்டால், அந்த நாடு தன்னைத்தானே பாதுகாப்பாக இருப்பதாக கூறிக்கொள்ளமுடியாது.

பஞ்சாப்பில் பிரதமர் மோடி மீது அராஜகவாதிகளால் நடத்தப்பட்ட கோழைத்தனமான தாக்குதலை வலுவான வார்த்தைகளில் நான் கண்டிக்கிறேன்" என்று தனது ருவிற்றர் பக்கத்தில் தெரிவித்திருந்தார். சாய்னாவின் இந்தப் பதிவை டேக் செய்த நடிகர் சித்தார்த், ஆபாசமாக பொருள் கொள்ளும்படியான வார்த்தையைப் பயன்படுத்தி சர்ச்சைக்குரிய வகையில் பதிவிட்டுள்ளார். இதனால் அவருக்கு எதிராக சமூகவலைத்தளங்களில் கண்டனங்கள் வலுக்க ஆரம்பித்துள்ளன.

இந்த நிலையில் விமர்சனத்துக்கு பதிலளித்த சித்தார்த், "நான் தரக்குறைவாக எதுவும் சொல்லவில்லை. யாரையும் அவமரியாதை செய்ய வேண்டுமென்றும் நான் நினைக்கவில்லை. அவ்வளவுதான்" என்று விளக்கம் கொடுத்துள்ளார்.

(ச-இ)


## மரண அறிவித்தல்

பிறப்பு 22 . 07 . 1947 இறப்பு 11 . 01 . 2022



**சரவணை பஞ்சலிங்கம் (பீற்றர்)**

அரியாலை மேற்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பீற்றர் என்று அன்பாக அழைக்கப்படும் சரவணை பஞ்சலிங்கம் (11.01.2022) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னர் காலஞ்சென்ற மங்கையற்கரசியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சரவணை சோதிமலரின் அன்பு மகனும், காலஞ்சென்ற வெற்றிவேலு, செல்லம்மாவின் அன்பு மருமகனும், மதிவதனி (லண்டன்), மதிவாணி, மதியழகன் (கொமர்ஷல் வங்கி - கொழும்பு), மதிவதனன் (அபிவிருத்தி உத்தியோகத்தர் புதுக்குடியிருப்பு, பிரதேச செயலகம்), ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஜெயகரன் (லண்டன்), சுதாகரன், இஷபெல்லா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜதேயன், தனயன், ஜெயஷ்வினி, பிரஜெஷ்வினி (லண்டன்), மித்திரா, கவிப்பிரணவ் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, கந்தையா, தவலக்சுமி, தவமணி, வேதபாக்கியம் மற்றும் பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு, S.K. மார்க்கண்டு, அம் பலம், தனபாலர் பாலச்சந்திரன் மற்றும் மங்கையற்கரசி, தர்மநாயகன், அருமைலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2022) பூமகள் வீதி, அரியாலையில் அமைந்துள்ள, அன்னாரது இல்லத்தில் மு.ப. 11.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
(CS 1093)1-6



## மரண அறிவித்தல்

**ஸ்ரீமதி சிவசண்முகக்குருக்கள் சிவகுமாரி (சிவா)**

பிறப்பு : 26.05.1976 இறப்பு : 08.01.2022



திருகோணமலையைப் பிறப்பிடமாகவும் நாகர்கோவில், நல்லூர் மற்றும் லண்டன் (என்பீல்ட்) ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி சிவசண்முகக்குருக்கள் சிவகுமாரி (சிவா) கடந்த (08.01.2022) சனிக்கிழமை லண்டனில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோபாலசர்மா - கார்த்தியாயினி அம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற கணபதிச்சாமி ஐயர் மற்றும் பவானியம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், யாழ். வடமராட்சி நாகர் கோவில் நாகதம்பிரான் ஆலய பரம்பரைக்குருவும் முன்னாள் லண்டன் ரூர்ரிங் முத்துமாரியம்மன் ஆலய உதவிகுருவும் தற்போது லண்டன் என்பீல்ட் நாகபூசணியம்மன் ஆலய உதவிக்குருவும் ஆகிய சிவஸ்ரீ சிவசண்முகக்குருக்கள் (சிவா ஐயா) அவர்களின் அன்பு மனைவியும், சிந்துயா, வைஸ்ணவி, விதுஷனசர்மா ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற கற்பகாம்பிகை மற்றும் பாலகுமாரசர்மா(இலங்கை), விஜயகுமாரசர்மா (லண்டன்), சுசீந்திரகுமாரக்குருக்கள் (இலங்கை), லலிதகலாம்பிகை (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி ஜெயந்தி விஷ்வநாதக்குருக்கள் அவர்களின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.01.2022) புதன்கிழமை முற்பகல் 10 .00 மணி தொடக்கம் 12.00 மணிவரை Barnet Multi Cultural Community Center, Algertnon Road, London NW4 3TA நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: சகோதரன்
பாலகுமாரசர்மா (அண்ணா )
076 617 8578
(cs.42196) (2.6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| பிறப்பு | | இறப்பு |
|---|---|---|
| 26 . 05 . 1977 | | 08 . 01 . 2022 |



## ஸ்ரீமதி சிவசண்முகக்குருக்கள் சிவகுமாரி (சிவா)

திருகோணமலையை பிறப்பிடமாகவும் நாகர்கோவில். நல்லூர் மற்றும் லண்டன் (என்பீல்ட்) ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட ஸ்ரீமதி சிவசண்முகக்குருக்கள் சிவகுமாரி(சிவா) அவர்கள் கடந்த (08.01.2022) சனிக்கிழமையன்று லண்டனில் இறைபாதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோபாலசர்மா, கார்த்தியாயினி அம்மா தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற கணபதிச்சாமி ஐயர் மற்றும் பவானியம்மாவின் அன்பு மருமகளும், யாழ். வடமராட்சி நாகர் கோவில் நாகதம்பிரான் ஆலய பரம்பரைக்குருவும், முன்னாள் லண்டன் ஔர்ரிங் முத்துமாரியம்மன் ஆலய உதவிகுருவும் தற்போது லண்டன் என்பீல்ட் நாகபூசணியம்மன் ஆலய உதவிக்குருவும் ஆகிய சிவஸ்ரீ சிவசண்முகக்குருக்கள் (சிவா ஐயா) அவர்களின் அன்பு மனைவியும், சிந்துயா, வைஷ்ணவி, விதுஷனசர்மா ஆகியோரின் பாசமிகு தாயாரும். காலஞ்சென்ற கற்பகாம்பிகை மற்றும் பாலகுமாரசர்மா (இலங்கை), விஜய குமாரசர்மா (லண்டன்), சுசீந்திரகுமாரக் குருக்கள் (இலங்கை), லலிதகலாம்பிகை (இலங்கை) ஆகியோரின் அன்புச்சகோதரியும் திருமதி ஜெயந்தி விஷ்வநாதக்குருக்கள் அவர்களின் அன்பு மைத்துனியும் ஆவார்.

இந்த அறித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இறுதிக்கிரிகைகள் இன்று (12.01.2022) புதன்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் 12 மணி வரை Barnet Multi Cultural Community Center, Algertnon Road, London NW43TA நடைபெறும். மேற்படி மண்டபத்தில் இறுதி மரியாதை செய்யவிரும்புவர்கள் முற்பகல் 11 மணி தொடக்கம் 12 மணி வரை COVID-19 சட்டவரையறையை பின்பற்றி முகக்வசம் (MASK) அணிந்து சமூக இடைவெளியைப் பேணி (Social Distance) ஒருவழிப்பாதையாக (Oneway System) வருகைதந்து ஒத்துழைப்பு நல்கும் வண்ணம் வேண்டுகின்றோம்.

தகனம் :- 12.45 மணிமுதல் 1.45 மனிவரை
Hendon Cemetery & Crematorium, Holders Hill Road London, NW7 1NB

**தொடர்புகளிற்கு :**- சிவா ஐயா (கணவர்) - 00447877830719 (London)
(49 Church Lane N99pz)
விஜி ஐயா (அண்ணா ) - 00447838778486 (London)
குமார் ஐயா (அண்ணா) - 0094766178578 (Srilanka)
சுசி ஐயா (அண்ணா ) - 0094774672760 (Srilanka)
சசி (அக்கா ) - 0094771985621 (Srilanka)
ஜெயந்தி (மைத்துனி) - 0027645120860 (South Africa)

(CS 10901) 1-6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தகவல்:**
**மலையக பிராமண சமாஜம்**

# யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகச் சந்தை
# Jaffna International Trade Fair

12th EDITION

வடக்கிற்கான உங்களது நுழைவாயில்

## January ஜனவரி 2022

## 21 22 23

**10.00 மு.ப - 8.00 பி.ப**

**Muttraweli Grounds**
(Next to Jaffna Fort)

**முற்றவெளி மைதானம்**
(யாழ் கோட்டைக்கு அருகில்)

- மோட்டார் வாகனத் தொழிற்துறை
- நிர்மாணத் தொழிற்துறை
- ஆடைத் தொழிற்துறை
- விருந்தோம்பல் தொழிற்துறை
- விவசாயத் தொழிற்துறை
- பிரயாணம் மற்றும் சுற்றுலாத் தொழிற்துறை
- உணவு பான வகை மற்றும் பொதியிடல் தொழிற்துறை
- தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத் தொழிற்துறை கல்வி
- நிதியியல் சேவைகள் மற்றும் நிறுவனங்கள்
- நுகர்வோர் பொருட்கள் மற்றும் பல

JITF 2022

jitf.lk
www.jitf.lk


ORGANIZED UNDER MINISTRY OF HEALTH GUIDELINES

MAIN SPONSOR: INSEE CEMENT
CO - SPONSOR: SLTMOBITEL The Connection
OFFICIAL PARTNERS: SAFETY & HYGIENE, FOOD, PRINT MEDIA, ELECTRONIC MEDIA
ORGANIZED BY: LECS
IN ASSOCIATION WITH: CCIY
ENDORSED SUPPORTED BY: EDB
PARTNER COUNTRY: India

For more information:
Imalka +94 71 7488107 | imalka@saexhibitions.com


# மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 22 . 01 . 1945 | 09 . 01 . 2022 |



## சிவசம்பு சிவசுப்பிரமணியம்

மட்டுவில் வடக்கு, சிவன்கோயிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவசம்பு சிவசுப்பிரமணியம் கடந்த (09.01.2022) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிவசம்பு - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற அருணாசலம் சின்னத்தம்பி (கிராமசேவகர்) மற்றும் தெய்வானைப்பிள்ளை (மரகதம்) ஆகியோரின் அன்பு மருமகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், நாகராஜாவின் அன்புச் சகோதரனும், சிவசந்திரிகா, சிவசந்திரன், சிவதர்சினி, சிவனேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவமைந்தன், மோகன்ராஜ் (கண்ணன்), ராஜிக்கா, சோபா ஆகியோரின் மாமனாரும், நவீன், பிரஜான், நிவேஷ், நெல்சன், ஏவா (Ava), தீபக், திவ்யா, புகழினி ஆகியோரின் அன்புப் பேரனும், அகிலன், ராஜகிரி, ஜங்கரன், ஸ்ரீரங்கன், கலைச்செல்வன், வினோத், பிருந்தா, சங்கவி, கபிலன், பிரணவன், மாயவன், சகானா, கீர்த்தனா, சந்தனா, வர்ணா, வர்ணன், வித்தகன், சுருதி, சாங்கீதன், அட்ஷயன், ஆரபி, அபிஷாந்த், அபினா, அபிதேவ் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், செல்லக்குட்டி, காலஞ்சென்ற தம்பு மற்றும் பறுவதம், சேதுப்பிள்ளை ஆகியோரின் பெறாமகனும், செல்லம்மாவின் மருமகனும், மனோகரன், கெங்காதரன், பரமேஸ்வரன், விமலாதேவி, சிவானந்தன், கேதீஸ்வரன், இராமச்சந்திரன், அருள், சத்தியமூர்த்தி, கிருபாகரன், சிவநங்கை, லோகேஸ்வரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், நடராஜா, தியாகராஜா, இந்திரராஜா, செல்வராஜா, பரஞ்சோதிராஜா, சின்னராசா, செல்வகணேஸ், செல்வவரதன், கலைச்செல்வி ஆகியோரின் உடன்பிறவா அண்ணனும், கார்த்திகன், வினோஜா, சர்மிலன், றஜீகரன், நவிலன், வாகீசன், சாதனா, சுபீட்சனா, சாயிஷனா, சுபிசன், நந்தனா, யசிக்கா, றூபனா, ஆருத்திரா, திருவாசகி ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (13.01.2022) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் வடக்கு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்பள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
மனைவி 076 570 3511
மகள் - 0094 70 170 6205
021 227 1837

சிவன் கோயிலடி,
சந்திரபுரம், மட்டுவில் வடக்கு,
சாவகச்சேரி.

(cr.37328) (2.6)

# பெயர் மாற்றம்

72/6, இராஜசிங்கம் வீதி, திருநகரில் வதியும் **றஜீவன் நோஜா** ஆகிய நான் எனது பெயரை **றஜீவன் றோஜா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **றஜீவன் றோஜா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

(cs 42193) (2.6) **றஜீவன் றோஜா**

# வேலையாள்கள் தேவை

உடுவிலில் அமைந்துள்ள ஆலயத்தையும், ஆலயத்தின் சமையலறையையும் மற்றும் ஆலயத்தின் சுற்றுப்புறச் சூழலையும் துப்புரவாகப் பேணிப்பாதுகாக்க வேலையாள்கள் தேவை.
ஆண், பெண் இருபாலாரும் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

**075 447 2884**

(cs 42194) (2.6)

THE HALO TRUST

450 Thirunagar West
Kilinochchi
Sri Lanka

T: +94 (0) 212 285 466
vanni@halosrilanka.org
mail@halosrilanka.org
www.halotrust.org

## VACANCY ANNOUNCEMENT- Data Entry Officer

The HALO Trust is a UK based non-political, non-religious Non-Governmental Organization specialized in the removal of the land mines and other explosive remnants of war has been operating in Northern Province of Sri Lanka since 2002, currently working in Jaffna, Killinochchi, and Mullaitivu and has a support office in Colombo.

HALO is seeking hard working candidates for the below vacancy based in Kilinochchi office. The Data Entry Officer is responsible for the entry of data from various sources onto a supplies database. You will manage a large amount of information that is sensitive and confidential. Information you enter will be used by the organization for reference and reports. You are accountable to the Head of HR for your output.

Responsibilities
1. Prepare and sort documents for data entry.
2. Enter data into database and check to ensure the accuracy of the data that has been input.
3. Resolve discrepancies in information and obtaining further information for incomplete documents.
4. Respond to information requests from authorized personnel.
5. Scan documents and print files, when needed.
6. Keep information confidential.
7. Comply with data integrity and security policies.

**Requirements:**
- Computer literacy – familiarity with MS Office especially in excel experience with web applications is advantageous.
- English language skills.
- Ability to work under pressure to deadlines.
- Experience using office equipment, like printers and scanner.
- Typing speed and accuracy.
- Excellent knowledge of correct spelling, grammar and punctuation.
- Attention to detail.
- Confidentiality.
- Preferable in store management.

Interested candidates should submit their applications with Curriculum Vitae and Cover letter explaining your suitability for the position to the below address or email on or before 20 January 2022.


Successful candidates will be only contacted, for further information see the advertised TOR or please contact us on 021 228 5466.
Women's are encouraged to apply.

**HR Manager**
**The HALO Trust**
**450, Thirunagar west**
**Kilinochchi**
**E-mail to hr@halosrilanka.org**

# மரண அறிவித்தல்

## தம்பையா நித்தியரத்தினம்

**(முன்னாள் ஆசிரியர் ஹாட்லிக் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணக் கல்லூரி)**



| மண்ணுலகில் | விண்ணுலகில் |
|---|---|
| 18.04.1935 | 08.01.2022 |

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு.தம்பையா நித்தியரத்தினம் (08.01.2022) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா - சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் பாசமிகு இளைய புதல்வரும், காலஞ்சென்றவர்களான ஞானரத்தினம் - ஜீவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயமணியின் பாசமிகு கணவரும் (ஓய்வுபெற்ற ஆசிரியர் வட்டு, இந்துக் கல்லூரி), தனஞ்செயன் (UK), காலஞ்சென்ற நித்தியராஜன் (Canada), ஜெயநிதி (ஆசிரியர், சைவ மங்கையர் வித்தியாலயம் கொழும்பு), ஜெயவதி (ஆசிரியர், கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் லக்சுமிதேவி (UK), ருத் வசந்தி (Canada), ஜீவரூபன் (Nexus property Developers (PVT) Ltd Colombo), சிறில் தனராஜன் (பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஹரிப்பிரணவி, ஹரிநிவாஜினி, ராம் நிவேதனன், லிடியா நடாஷா, றேச்சல் நடானியா, ஜீவாஸ், ஜீவினி, திவ்வியராஜ், நிரேஷ்ராஜ் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான ஆனந்தரத்தினம், ஆறுமுகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான ஜெயராஜா, ஜெயரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மானிப்பாய் வீதி கோப்பாய் மத்தியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (12.01.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு இறுதி நல்லடக்க ஆராதனை நடைபெற்று புனித மரியாள் ஆலய சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

12.01.2022 புதன்கிழமை இலங்கை நேரம் காலை 09.00 மணியிலிருந்து அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனைய்ய கீழ்வரும் நேரலைகள் மூலம் பார்வையிடலாம்.

https:// lankaripbook.com
https://www.youtube.com/watch?v=s7kod-iXdUQ

தகவல் : குடும்பத்தினர்.
077 104 3575, 077 351 4338,
077 700 8279

"ஞானபதி",
கோப்பாய் மத்தி, கோப்பாய்.

(CS 1068)(1.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ராஜபக்சக்களை...

வடக்கு மாகாணத்துக்குப் பயணம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ யாழ்ப்பாண மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு வருகின்றார்.

இந்தநிலையில், கட்சியின் உடுப்பிட்டித் தொகுதி அமைப்பாளர் அகிலதாஸின் ஏற்பாட்டில் கரவெட்டியில் தைப்பொங்கல் பண்டிகைக்காக பொங்கல் பொருள்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய மக்கள் சக்தியானது எதிர்க்கட்சியாக இருந்து கொண்டும் அரசியலில் மட்டும் கவனம் செலுத்தாது மக்களின் சுகாதாரம், கல்வி போன்ற விடயங்களிலும் அவதானம் செலுத்தி வருகின்றது. குறிப்பாக நாடு முழுவதிலுமுள்ள பின்தங்கிய மருத்துவமனைகளுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களையும் பாடசாலைகளுக்குத் தேவையான நவீன உபகரணங்களையும் வழங்கி வருகின்றோம்.

இவ்வாறான சேவைகளை வழங்குவதையிட்டு பெருமையடைகின்றேன். ஏனென்றால், எந்தவோர் எதிர்க்கட்சியும் இவ்வாறு செயற்பட்டது கிடையாது. குறிப்பாக எதிர்க்கட்சியாக உள்ளவர்கள் வெறுமனே எதிர்ப்பு அரசியலில் மட்டும் கவனம் செலுத்துவார்கள். நாங்கள் ஒரு புதிய கட்சி. ஆனால், நாங்கள் புதிய யுகத்தை நோக்கிப் பயணிக்கிறோம்.

**அரசு மேல் வெறுப்பு!**

தற்போது பொதுமக்கள் அரசாங்கத்தை வெறுக்கின்றார்கள். ஏன் இவர்களுக்கு வாக்களித்தோம் என்று எண்ணும் அளவுக்கு நிலைமை காணப்படுகின்றது. ராஜபக்சக்களின் ஆட்சியில் நாடு இருண்ட யுகத்துக்குள் வீழ்ந்துவிட்டது. மக்கள் தமது நாளாந்த வாழ்வைக் கொண்டு செல்லவே முடியாதளவுக்கு சுமைகள் அதிகரித்துவிட்டன. இலங்கை வரலாற்றிலேயே மக்களால் மிகமோசமாக வெறுக்கப்பட்ட அரசாங்கமாக இப்போதைய அரசாங்கம் மாறிவிட்டது. ராஜபக்சக்களை ஆட்சியில் அமர்த்திய அதே மக்களே, இன்று அவர்களை விரட்டியடிக்கவேண்டுமெனத்துடிக்கின்றனர். இத்தகைய நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுத்து, புதிய யுகம் நோக்கி பயணிக்க வைக்க, ஐக்கிய மக்கள் சக்தியால் மட்டுமே முடியும். நாங்கள் எல்லாவற்றையும் உற்றுநோக்கி செயற்படுகின்றோம். எனவே, அனைத்து மக்களும் ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்து செயற்படுவதன் மூலம் புதுயுகத்தை நோக்கிப் பயணிக்க முடியும் - என்றார். (த-20)

## பால்புரையேறி...

கேறியதால் உயிரிழந்த சம்பவம், வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சித்தன்கேணி பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

கஜானன் அனஞ்சனா என்ற பிறந்து 52 நாள்களேயான பெண் குழந்தையே உயிரிழந்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு தாயார் குழந்தைக்குப் பால் கொடுத்துவிட்டு தூங்க வைத்துள்ளார். அதிகாலை குழந்தையைத் தூக்கிய பொழுது உடல் அசைவற்று காணப்பட்டுள்ளது. அத்துடன் பால் புரையேறிய நிலையில் மூக்கால் குருதி வழிந்து காணப்பட்டது. உடனடியாக பிரதேச மருத்துவமனைக்கு கொண்டுசெல்லப்பட்டபோதும் குழந்தை ஏற்கனவே இறந்து விட்டதென்று பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டது.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேமகுமார் விசாரணை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனைக்காக சடலம் மருத்துவமனையில் உள்ளது. (த-25)

## தேவாலயத்தில்...

பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அந்த தேவாலயத்தின் பணியாளர் ஒருவர் குறித்த கைக்குண்டை அடையாளம் கண்டு பொலிஸாருக்கு வழங்கிய தகவலுக்கு அமைய பொலிஸார் அதனை மீட்டுள்ளனர். சந்தேகத்தின் பேரில் 3 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைக்குண்டை செயலிழக்கச் செய்வதற்கு விசேட அதிரடிப்படையினரின் ஒத்துழைப்பு பெறப்பட்டது என்றும் பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது. (த-இ)

## கடற்படை...

மீட்கப்பட்டார். அவர் பயணித்த படகு உடைந்தநிலையில் கரையொதுங்கியது. கடற்படையினரின் படகு மோதியதால் அவர் உயிரிழந்தார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம், நேற்றுக் காலை இடம்பெற்றது. சம்பவத்தில், இதே பகுதியைச் சேர்ந்த எட்வேட் ஜெயசீலன் (வயது - 31) என்பவரே சடலமாக மீட்கப்பட்டார். அவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையாவார்.

அவர், நேற்றுமுன்தினம் இரவு 7 மணியளவில் மீன்பிடிப்பதற்காக மோட்டார் படகு மூலம் மாதகல் கடற்பரப்புக்குச் சென்றுள்ளார்.

இந்தநிலையில், அதிகாலை ஒரு மணியளவில் கடற்படை படகு தாக்கி குறித்த மீனவர் உயிரிழந்தார் என்று சக மீனவர்கள் தெரிவித்தனர்.

மேலும், மோட்டார் இயந்திரப் படகு ஒன்று கடலில் மூழ்கிக்கொண்டிருப்பதாகவும் வலைகள் கடலில் உள்ளன என்றும்கரையிலுள்ளமீனவர்களுக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய விரைந்துசென்ற மீனவர்கள் மோட்டார் படகையும் வலைகளையும் மீட்டுவந்தனர்.

சிறிது நேரத்தில், காலை 6.45 மணியளவில் மீனவர் ஒருவரின் சடலம் மாதகல் கடற்கரையில் கரையொதுங்கியுள்ளதாகக் கிடைத்த தகவலுக்கமைய அந்த இடத்துக்குச் சென்றுபார்த்தபோது, காயங்களுடன் மீனவர் சடலமாகக் காணப்பட்டார்.

இது தொடர்பில் இளவாலை பொலிஸாருக்கும் நீரியல்வளத்துறைத் திணைக்களத்தினருக்கும் மீனவர் சங்கங்களால் தகவல் வழங்கப்பட்டது.

"கடற்படையினர் எமது படகுடன் மோதியதால் எங்களுடைய ஒரு படகு கவிழ்ந்துவிட்டது" என்று மீனவர்கள் கடலிலிருந்த சக மீனவர்களுக்குத் தகவல் வழங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், இந்தக் குற்றச்சாட்டை மறுத்த கடற்படையினர், இந்திய இழுவைப் படகுகள் மோதியதால் இந்தச் சம்பவம் நேர்ந்திருக்கலாம் என்று தெரிவிக்கின்றனர்.

" அந்தப் படகு ஒன்றரை கிலோமீற்றர் எல்லைக்குள்தான் மூழ்கியிருந்தது. அந்த எல்லைக்குள் இந்திய இழுவைப் படகு வருவதில்லை. படகின் இயந்திரம் உடைந்திருந்ததுடன் , மீனவரின் உடலில் காயங்களும் காணப்படுகின்றன" என்றும் மீனவர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

"எங்களுடைய படகு மோதி மீனவர் ஒருவரின் படகு விபத்துக்குள்ளாகியது" என்றும் முதலில் சில மீனவர்களிடம் தகவல் தெரிவித்த கடற்படையினர் , பின்னர் அதை மாற்றி " இந்திய இழுவைப்படகு மோதியே இந்த அனர்த்தம் நிகழ்ந்தது' எனக் கூறியுள்ளனர்.

ஆனால், கடற்படையினரே மீனவரின் படகோடு மோதி அவரைக் கொன்றனர் என்று அங்குள்ள மக்கள் கூறுகின்றனர். குறித்த மீனவர் அண்மைய காலங்களில் காணி அபகரிப்புக்கு எதிரான போராட்டங்களிலும் கலந்துகொண்டிருந்தார் என்றும் மக்கள் கூறுகின்றனர். (த-319,26,25,27)

## மாதகலில்...

வுள்ளது.

குறித்த மீனவரின் இறுதிக் கிரியைகள் மாதகலில் நாளை நடைபெறவுள்ள நிலையில், இந்தப் பெரும் போராட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மீனவர்களைப் பாதுகாக்க முடியாத கடற்படைக்கு ஏன் காணி வழங்கவேண்டும்? என்று கேள்வி எழுப்பப்பட்டுள்ளதோடு, கடற்படைக்கு காணி வழங்குவதைத் தடுக்கக் கோரியும், மீனவரின் இறப்புக்கு தேசிய ரீயில் கவனத்தை ஈர்க்கவும் இதுபோன்ற உயிரிழப்பைத் தவிர்க்கும் நோக்கிலும், மாபெரும் எதிர்ப்புப் போராட்டம் நடத்தப்படவுள்ளது. இதில், ஆயிரக்கணக்கானோர் பங்குபற்றுவர்.

எனவே, இந்தப் போராட்டத்தில், கட்சி பேதமின்றி அனைத்து அரசியல் கட்சிகளும், முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் மாகாண சபை முன்னாள் உறுப்பினர்களையும் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களையும் சமூக அமைப்புகளையும் கலந்துகொள்ளுமாறு வலி.தென்மேற்கு பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன் அழைப்பு விடுத்துள்ளார். (த)

## துயரமான...

டும். எங்களுடைய ஆர்ப்பாட்டங்களையும் போராட்டங்களையும் எந்தவித காரணங்களுக்காகவும் கைவிடக்கூடாது. அவற்றை சர்வதேச சமூகத்துக்கு சுட்டிக் காட்டவேண்டும். மீனவர் உயிரிழப்புச் சம்பவம் மிகப்பாரதூரமானது.

இவ்வாறு, தமிழ் அரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈஸ்வரபாதம் சரவணபவன் தெரிவித்தார்.

மாதகலில் கடற்படையினரின் படகு மோதியதால் மீனவர் ஒருவர் உயிரிழந்தார் என்றுசக மீனவர்கள் குற்றம்சாட்டும் நிலையில், அது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே சரவணபவன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தச் சம்பவத்தைப் பார்க்கும்போது விபத்தா? கொலையா? என்பதை தற்போது சொல்ல முடியாதுள்ளது. ஆனால், இங்கே மீனவர்களிடம் கடற்படையினர் தம்முடைய படகுடன் பிறிதொரு படகே மோதிவிட்டதாக கூறிச் சென்றுள்ளனர்.

இந்தப் பெரிய சமுத்திரத்தில் இவ்வாறான சம்பவங்கள் எவ்வாறு சாத்தியம்? என்பது ஒரு கேள்விக்குறியாகவே இருக்கின்றது. சில வாரங்களுக்கு முன்பு இந்தப் பிரதேசத்திலுள்ள பொதுமக்களுக்கு சொந்தமான காணியை நில அளவைத் திணைக்களத்தினர் கடற்படையினரின் தேவைகளுக்காக சுவீகரிக்க முயன்றபோது நாம் அனைவரும் இணைந்து தடுத்து நிறுத்தி இருந்தோம்.

இன்றைய விபத்தில் இறந்தவரும் அன்றைய காணி சுவீகரிப்புக்கு எதிரான போராட்டத்தில் பங்குபற்றியிருந்தார் என்பது யாவரும் அறிந்ததே. இதில் மிகத் தீவிரமாகப் பங்குபற்றிய இருவர் மீது கஞ்சா பிரச்சினையைச்சோடித்து அடக்கி வைத்திருக்கின்றார்கள்.

எனவே, இது ஒருவகையில் ஆக்கிரமிப்பும் அராஜகமும் கூட. தாம் எதுவும் செய்யலாம் என்பதே அவர்களுடைய எண்ணமும் நிலைப்பாடும் ஆகும்.

இதிலிருந்து எவ்வாறு நாங்கள் மீள வேண்டும் என்பது பற்றி ஒற்றுமையாகச் சிந்தித்து பதில்களை திருப்பி வழங்க வேண்டும்.

தற்போது யாழ்.குடாநாட்டைச்சூழ ஆயுதம் தாங்கியவர்கள் இருக்கின்றனர். நாங்கள் சுதந்திரமாகச் செயற்பட முடியாது, செயற்பட விடமாட்டோம் என்று ஒரு தகவலை இந்த அரசாங்கம் கொடுத்துக் கொண்டிருக்கின்றது. அதற்கேற்றாற்போல இந்த அரசாங்கத்தை வழிநடத்தும் தலைவரும் இருக்கின்றார். எனவே, நாங்கள் எங்களுடைய தற்பாதுகாப்பு எடுக்கும் அதேநேரத்தில் சர்வதேச சமூகத்தினர் இதுபற்றிப் புரிந்து கொள்கின்றார்களில்லை. அவர்கள் தமது அனுதாபங்களையும் கண்டிப்புகளையும்தான் தெரிவித்துக் கொள்கிறார்கள். எந்த ஒரு காத்திரமான முடிவையும் காண்கிறார்களில்லை.

இந்தச் சம்பவம் மிகவும் பாரதூரமான விடயம் கண்டிக்கப்பட வேண்டிய ஒன்று என்றார். (த-319)

## இந்த வருடத்துக்குள்...

கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு நேற்று அறிவித்தது.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் நீடிப்பு மற்றும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலேயே அமைச்சரவை இணைப்பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண அரசின் மேற்படி நிலைப்பாட்டை அறிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

"உள்ளூராட்சி சபைகளின் பதவிக்காலம் ஓராண்டுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. இரு பிரதான விடயங்களைக் கருத்திற்கொண்டுதான் இந்த முடிவு எடுக்கப்பட்டது. முதலாவது விடயம் சுகாதாரப் பாதுகாப்பு.

அடுத்ததாக உள்ளூராட்சி சபைகளின் பதவிக் காலத்தில் இரு வருடங்கள் கடந்த ஆட்சியின்கீழ் சென்றது. இதனால் உள்ளூராட்சி மன்றங்களால் உரியவகையில் செயற்படமுடியாமற்போனது. அடுத்த இரு வருடங்கள் கொரோனாப் பாதிப்பு. எனவே, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் மக்களுக்கான சேவையை வழங்குவதற்கு காலம் வழங்க வேண்டும். அந்தவகையில்தான் பதவிக் காலம் ஓராண்டுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

மாகாணசபைத் தேர்தல் தொடர்பான சட்டம் கடந்த ஆட்சியின்போதுதான் திருத்தப்பட்டது. எனவே, அதனை மீண்டும் திருத்தாது தேர்தலை நடத்துவதில் சிக்கல் நிலைமையுள்ளது. இது தொடர்பில் அரசு அவதானம் செலுத்தியுள்ளது. இதன்படி இந்த வருடத்துக்குள் மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்"- என்றார். (த-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மிகவும் குறைந்தளவு விலைக்கு தேசிய சொத்துக்கள் விற்பனை!

## இம்ரான் மஹ்ரூப் ஆவேசம்



**கொழும்பு, ஜன. 12**

**நாட்டைக் காக்க அதிகாரத்தைக் கோரியவர்கள் நாட்டை வெளிநாடுகளிடம் அடகு வைத்துள்ளனர். அடிமட்ட விலைக்கு தேசிய சொத்துக்களை விற்கின்றனர் என ஐக்கிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப் தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது: 1924ஆம் ஆண்டு எண்ணெய்த் தாங்கிகளின் நிர்மாணப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு 1930ஆம் ஆண்டளவில் 101 எண்ணெய் தாங்கிகளும் முழுமையாக அமைக்கப்பட்டன. ஒரு தாங்கியில் 12 ஆயிரம் தொன் எண்ணெயைச் சேமிக்க, மொத்தமாக 1.2 மில்லியன் தொன் எண்ணெய்யை இதில் சேமிக்க முடியும். இதில் 15 தாங்கிகள் ஏற்கனவே 2004ஆம் ஆண்டில் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுவிட்டன. தற்போது 61 தாங்கிகளை இந்தியா- இலங்கை ஒன்றிணைந்து அபிவிருத்தி செய்யும் முயற்சி எனும் பெயரில் இந்தியாவுக்கு விற்கும் ஒப்பந்தத்தை அரசு மேற்கொள்ளவுள்ளது. இந்த மொத்த தாங்கிகளிலும் 1.2 மில்லியன் எண்ணெயை சேமித்தால் நாளாந்தம் மில்லியன் டொலருக்கு அதிகமாக எம்மால் வியாபாரம் செய்யமுடியும்.

ஆனால், இதை இலங்கை அரசு வெறும் 500 மில்லியன் டொலருக்கு விற்பனை செய்கிறது. 1994ஆம் ஆண்டு முதல் சுதந்திரக் கட்சி அல்லது பொதுஜன பெரமுனவைச் சேர்ந்த ஜனாதிபதிகளே இந்த நாட்டை ஆட்சி செய்கின்றனர்-என்றார். (ம)

## மருத்துவருக்கு சுகவீனம் நோயாளிகள் அந்தரிப்பு

வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனைக்கு நேற்றுமுன்தினம் நீண்ட நேரம் மருத்துவர் வருகை தராமையால், சிகிச்சைக்காக வருகை தந்த நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளிகள் அந்தரித்தனர். கடமையிலுள்ள மருத்துவர் சுகவீன விடுமுறைக் கடிதத்தை அன்றைய தினம் காலை வழங்கியிருந்த நிலையில், மருத்துவமனைக்கு வருகை தந்த நோயாளிகள் சிரமங்களை எதிர் கொண்டனர். "குறித்த மருத்துவர் சுகவீன விடுமுறையை முறைப்படி பெற்றுள்ளார். அவருக்குப் பதிலாக வேறு ஒரு மருத்துவரை பதில் கடமைக்கு அமர்த்தியுள்ளோம். அவரும் வேறு மருத்துவமனையில் கடமை புரிகின்றார். அங்கு கடமைகளை முடித்துவிட்டு மருத்துவமனைக்கு வருவார்" என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். எனினும் முற்பகல் 11.30 மணிவரை காத்திருந்த நோயாளிகள் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். அதன் பின்னரே வேறொரு மருத்துவர் அங்கு கடமைக்கு வந்திருந்தார். (ஓ-4,27)

**வேலையாட்கள் தேவை**

யாழ். நகரிலுள்ள வாகன சுத்திகரிப்பு நிலையம் ஒன்றிற்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

1. வாகன சுத்திகரிப்பு பணியாளர்
2. அனுபவம் வாய்ந்த Wheel Alignment பணியாளர்

(CR 5686) 1-6

**075 634 4585**

**VACANCY**

Staff wanted for a worldwide frontline and famous online marketingentity to work in customer service unit.
Fluent in spoken English
Data entry skill with speed keyboard typing are expected
Having software knowledge is pererferred
Staff can work from home,
Those who are interested please send your bio data /curriculum vitae to the email address

jobinfojaffna@gmail.com
Closing date is 14.01. 2022

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் நாவற்குழி ஐயனார் கோவில் வீதியில் 18 அடி பாதையுடன் 90 பரப்புக் காணி 1 1/2, பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு. (மேட்டுநிலம், நிலபரப்பு, நாவற்குழி சந்தியிலிருந்து 1/2 km தூரம்)
ஒரு பரப்பின் விலை 4 லட்சம்.

தொடர்பு: **077 911 6983, 077 658 5999, 077 288 0152, 077 623 4204.**

(CS 986) 1-6

**வெளிநாட்டில் வேலைவாய்ப்புக்கள்**

**ஓமான்**
ஓமானில் பிரபல கம்பனியில் வேலைவாய்ப்பு
நீண்ட இடைவெளிக்குபின் ஓமான் இலங்கையர்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியுள்ளது.
✓கிளீனர் (Hospital, Hotel, Shopping mall)
Duty time : 8 hours
சம்பளம் : 75,000.00+overtime

**சவூதி அரேபியா**
✓Welder
Salary : 1800 Saudi riyals
சவுதி செல்ல விசா ரிக்கட் இலவசம்.
✓Cleaner
Salary : 1300+Overtime

**குவைத்**
✓கனரக வாகன சாரதிகள்
10 வீல் டிப்பர்
சம்பளம் : 135000.00+
டிரிப் அலவன்ஸ்.
இலங்கை கனரக வாகன லைசன்ஸ் போதுமானது

உணவு, தங்குமிடம் விடுதிகள், மருத்துவம் இலவசம்

நேர்முகத்தேர்வு இல்லை
➤வீசா கைவசம் உள்ளன ➤உடனடி பயணம்
அழையுங்கள் : **0777 22 82 31**

**KBK Accounting College**

*கந்தர்மடம் *கொழும்புத்துறை
A/L கணக்கீடு | Gr.10,11 வணிகமும் கணக்கீடும்
(cs.957) (2.6)
திரு.கி.பா.பாலகனன் M.Com
**077 216 8884**

**சிறுநீரகம் தேவை**

48 வயதுடைய $O^+$ குருதி வகையைச் சேர்ந்த பெண் சிறுநீரக நோயாளி ஒருவருக்கு $O^+$ Group வகையை உடைய சிறுநீரகத்தை தானமாக வழங்கக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.

(CR 1081) 1/6

**நிருசன்: 076 523 2502**

## மரண அறிவித்தல்

பிறப்பு
25 . 09 . 1957



இறப்பு
11 . 01 . 2022

### திருமதி தேவதாசன் புஸ்பகலாதேவி

(சாவகச்சேரி பிரதேச சபை ஐங்கரன் முன்பள்ளியின் ஓய்வு பெற்ற முன்பள்ளி ஆசிரியை)

மீசாலை கிழக்கு மீசாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தேவதாசன் புஸ்பகலாதேவி (ராணி ரீச்சர்) நேற்றைய தினம் (11.01.2022) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு இலட்சுமிப்பிள்ளைதம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற நல்லதம்பி இராசா தம்பதியினரின் மருமகளும், தேவதாசனின் அன்பு மனைவியும், சத்தியகௌரியின் பாசமிகு தாயாரும் நிதர்சனின் (பெல்ஜியம்) பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின இறுதிக்கிரியை இன்று (12.01.2022) புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
கு. நிதர்சன் (மருமகன்)

## மரண அறிவித்தல்

மண்ணில்
28 . 11 . 1947



விண்ணில்
10 . 01 . 2022

" கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்" (1 தொலோ 4;1)

### திருமதி பாலச்சந்திரன் மேரிராணி

முல்லைத்தீவு வண்ணாங்குளத்தைப் பிறப்பிடமாகவும் வவுனியா இறம்பைக்குளத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாலச்சந்திரன் மேரிராணி அவர்கள் 10.01.2022 திங்கட்கிழமை அன்று இறைபாதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற பாலச்சந்திரன் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பஸ்தியாம்பிள்ளை - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சண்முகம் - அன்னமுத்து தம்பதிகளின் அன்பு மருமகளும் BISHOP நிக்களஸ் இராஜசிங்கம் (வவுனியா), தயாழ இராஜேஸ்வரி (வவுனியா), பாபு (லண்டன்), செல்வி (கனடா) தாமரை (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், விக்டோரியா, உதயன், உதயசாந்தினி, சிவம், ரவி, ஆகியோரின் அன்பு மாமியாரும், மேரி ரோஷலின், மேரி புஸ்பம், மேரி ஜோசப், மேரி பிரான்சிஸ், மேரி பற்றிக், காலஞ்சென்ற ஜேசுரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அருணகிரி, கிட்டன், சிவராசன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதி அடக்க ஆராதனைகள் நாளை (13.01.2022) வியாழக்கிழமை நண்பகல் 12.30 மணியளவில் ஈஷி பூரண சுவிஷேச சபை இறம்பைக்குளம் வவுனியாவில் நடைபெற்று பிற்பகல் 4 மணியளவில் திருவுடல் நல்லடக்கத்திற்காக இரணைப்பாலை, மாத்தளன் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இறம்பைக்குளம்,
வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்
0776627545 / 0776461840

(cs.00949) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.01.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.